வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams
North America
SINCE 1988

பனி மலர்

அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2054 / தை மாதம் ஜனவரி 2023

அருவி மலர்க் குழு

இரம்யா ரவீந்திரன்
ஆசிரியர்
சார்லட், NC

ஷீலா ரமணன்
இணையாசிரியர்
சான் அன்டோனியா,TX

உமா ராம்குமார்
இணையாசிரியர்
நியூயார்க், NY

இந்து ராவ்
துணையாசிரியர்
நியூயார்க், NY

பிரதிபா பிரேம்குமார்
துணையாசிரியர்
அட்லாண்டா, GA

விஜயகுமார் தேவராஜ்
துணையாசிரியர்
நியூயார்க், NY

ஜேசு சுந்தரமாறன்
துணையாசிரியர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA

செந்தில் முருகன் வேலுசாமி
வாஷிங்டன்,DC

இளங்கோவன் சந்தானம்
துணையாசிரியர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA

மீனா சுந்தர்
ஆலோசகர்
சான் ஃபிரான்சிஸ்கோ, CA

இளங்கோவன் தங்கவேலு
ஆலோசகர்
செயின்ட் லூயிஸ், MO

பேரவைத் தலைவர் மடல்

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் உறுப்பினர் சங்கத்தின் தூண்களான அவற்றின் அங்கத்தினர்கள் அனைவர்க்கும் என் இனிய வணக்கம். பேரவையின் பேராளர்கள், வாழ்நாள் உறுப்பினர்கள், மற்றும் கொடையாளர்களுடன் அருவி இதழ் வாயிலாக உரையாடுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

பேரவையின் 35-ஆவது ஆண்டு விழா நியூயார்க்கில் யூலை 1, 2, 3 திகதிகளில் இனிதே நடந்து முடிந்தது. "கொரோனா பெருந்தொற்றின் அச்சம் இன்னும் முழுதாக விலகாத நிலையில், இரண்டு ஆண்டுகள் நேரடியாக சந்தித்திராத பல குடும்பங்கள், இவ்விழாவில் கலந்துகொண்டு, சற்றேறக்குறைய இரண்டாயிரம் பேர் கூடிய ஓர் பெருவிழா, நானூற்றுக்கும் மேற்பட்ட தன்னார்வலர்களால், அவர்தம் தன்னலமற்ற உழைப்பால் நிகழ்ந்தது. விழாவுக்கு வந்திருந்த சிறப்பு விருந்தினர்களை முழுமையாகப் பயன்படுத்தினோம். சுவைமிக்க சிறப்பான உணவு, அதை விடச் சிறப்பாக உணவு பரிமாறிய நமது தன்னார்வத் தொண்டர்கள், மேலும் பற்பல தன்னார்வலர்களைக் கொண்ட 40க்கும் மேற்பட்ட குழுக்கள், இளையோர் அதிகம் பங்குபெற்ற சிறப்பான இணையமர்வுகள், பற்பல போட்டிகளும் அதில் பங்கு பெற்ற உற்சாகமிக்க இளையோரும், இலக்கிய வினாடி வினா உள்ளிட்ட அருமையான பல மேடை நிகழ்வுகள், பறையும் கும்மியும் கலந்த தனித்துவம் மிக்க சங்கங்களின் சங்கமம், தமிழக முதல்வரின் காணொளி, குறிப்பாக அக் காணொளியில், தொற்றுக் காலத்தில் நமது பேரவையின் உதவிகளை மறவாமல் நன்றி சொல்லிய பாங்கு, அரசியல் பேசாமல், அயலகத் தமிழர்களின் நலன் கருதி ஆற்றிய உரை – நமது பேரவையின் வரலாற்றில் பொறிக்கப்படவேண்டியது" என்று நன்றியுடன் விழா ஒருங்கிணைப்பாளர் கூறியுள்ளார்.

நியூயார்க் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து பேரவை அமைக்கும் "தமிழ்க் குடில்" சிறப்பாக அமைய இந்த விழா பேருதவியாக அமையும் என்பது உறுதி. செவ்வனே நிறைவடைந்த 35-ஆவது விழாவுக்கு உழைத்த தன்னார்வலர்களுக்கும், நிதியுதவி புரிந்த வள்ளல்களுக்கும், வணிகர்களுக்கும், எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த ஆண்டு சாக்ரமெண்டோ நகரில் நடக்கும் 36-ஆவது பேரவை விழாவில் மீண்டும் சந்திப்போம்.

பேரவையானது, தமிழுக்கும் தமிழர்க்கும் தொண்டாற்றுவதோடு, தமிழர் பண்பாட்டையும் தமிழ் மொழியின் சிறப்புகளையும் வட அமெரிக்காவின் அனைத்துத் தரப்பினர்க்கும் எடுத்துச் செல்கிறது. மேலும், நம் தமிழ்ச் சங்கங்களில் ஆர்வமுடையோர் தங்கள் எழுத்து, கவிதை, மற்றும் பேச்சுத் திறன்களை வளர்த்துக் கொள்ள பயிற்சிப் பட்டறைகள் நடத்தவும் செய்கிறது. "மயிலே மயிலே" என்ற குழுவின் மூலமாகத் தங்களின் அனுபவங்களை தங்கு தடையில்லாமல் கதை வடிவில் பிறருடன் பகிர்வதற்கானத் தளத்தினை அமைத்துள்ளோம். "ஆறுமுகங்கள்" என்னும் குழு தரம் வாய்ந்த விவாத மேடையை அமைக்கிறது. அருவி இதழ் கவிதை, கட்டுரை, மற்றும் இதழியல் திறன்களை பதிப்பிப்பதுடன், பேரவை மற்றும் சங்கங்களின் நிகழ்ச்சிகளைத் தொகுத்து அளித்து வந்தது. கொரோனா தொற்றின் இரண்டாண்டு காலம் கடந்து, மீண்டும் பேரவையின் அருவி இதழை வெளிக்கொண்டு வருவது பெரு மகிழ்ச்சியினைத் தருகிறது.

அண்மையில் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு 10 சதவிகித இட ஒதுக்கீடு அளிக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கவனிக்கத்தக்கது. இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி சமூகநிலை மற்றும் கல்வியறிவு

ஆகியவற்றில் நலிவுற்றவர்களுக்கு மட்டுமே இது வரையில் இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டு வந்தது. தற்சமயம் பொருளாதார அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த இடஒதுக்கீடு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இருந்த 69 சதவீத இட ஒதுக்கீட்டை 79 சதவீத அளவு அதிகரிக்கிறது. வாக்கு அரசியலுக்காகவும், உயர்சாதி பிரிவினர் பயன்பெறும் வகையில் இந்த இடஒதுக்கீடு அமைந்துள்ளதாக எதிர்ப்புக் குரல் எழுந்துள்ள நிலையில், இந்த இடஒதுக்கீடு அனைத்து பிரிவினருக்கும் பொதுவானது என்று அமைந்திருந்தால் நிச்சயம் அனைவராலும் வரவேற்கப்பட்டிருக்கும் ஒன்றாக மாறி இருக்கும் என்பதில் நீங்களும் உடன்படுவீர்கள் என்று எண்ணுகிறேன்.

44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் சென்னையில் யூலை 28 முதல் ஆகஸ்ட் 9, 2022 வரை நடைபெற்றது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. உருசியாவில் நடக்கவிருந்த இந்தப் போட்டி, போர் சூழல் காரணமாக வேறு ஒரு நாட்டில் நடத்துவது என்று தீர்மானம் செய்யப்பட்ட நிலையில், போட்டியை எடுத்து நடத்த தமிழக அரசு முன்வந்தது. கொரோனா நோய்த் தொற்று காலத்தில், கிட்டத்தட்ட நான்கு மாதங்களிலேயே, சென்னை மகாபலிபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் போட்டி உலக அரங்கில் தமிழர்களின் பெருமையை நிலைநிறுத்தி உள்ளது என்று சொன்னால் அது மிகை இல்லை. போட்டியைச் சிறப்பாக நடத்திய தமிழக அரசு, FIDE அமைப்பு, பின்னின்று உழைத்த தன்னார்வலர்கள் அனைவருக்கும் பேரவையின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

‘மெட்ராஸ் ப்ரெசிடென்சி’ என்பது தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் பெற்ற தினமாக யூலை 18 ஆம் தேதியைத் தமிழக அரசு அறிவித்துள்ளது. பேரவையின் சார்பாக தமிழ்நாடு நாளை முன்னிட்டு யூலை 18 அன்று பேரவையின் சமூக ஊடகப் பக்கங்களில் வாழ்த்துச் செய்தி வெளியிடப்பட்டது.

மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையிலான அலுவல் மொழி தொடர்பான நாடாளுமன்றக் குழு மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு, 2022 அக்டோபர் மாதத்தில் அளித்துள்ள அறிக்கையில், ஆங்கிலம் பயிற்று மொழியாக உள்ள இடங்களில் எல்லாம், இந்தியைப் பயிற்று மொழியாக அமல்படுத்த வேண்டும் என்ற பரிந்துரையை முன்வைத்துள்ளது. ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம், சி.எஸ்.ஐ.ஆர் உள்ளிட்ட ஒன்றிய அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளில் இந்தியைப் பயிற்று மொழியாக ஆக்கும் பரிந்துரை, ஆங்கிலத்தில் நல்ல புலமை பெற்ற தொழில்நுட்பப் பணியாளர்கள் அதிகம் உள்ள நாடு என்ற நிலையில் உள்ள இந்தியாவை, முன்னேற்றப் பாதையில் இருந்து பல வருடம் பின்னோக்கித் தள்ளும் ஒரு முயற்சியாகவே கருதுகிறேன். இந்திய ஒன்றியத்தின் அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில், தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளுமே சம உரிமை கொண்ட மொழிகள் என்பது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. வேற்றுமையில் ஒற்றுமை காணும் தன்மை கொண்ட இந்திய நாட்டில் அனைத்து மொழி பேசும் மக்களையும் அரவணைத்து, அனைத்து மொழிகளுமே இந்திய ஒன்றியத்தின் அலுவல் மொழி என்ற நிலையினை எட்டிட வேண்டும் என்பதே உலகெங்கும் வசிக்கும் அனைத்து தமிழர்களின் எண்ணமாக இருக்கும் என்பது திண்ணம்.

நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கும் தீர்மானம், தமிழ்நாட்டில் உள்ள கல்லூரிகளில் துணை வேந்தர்களை நியமிக்க தமிழக அரசிற்கு அதிகாரம் அளிக்கும் தீர்மானம் உள்ளிட்ட இருபதிற்கும் மேற்பட்ட தீர்மானங்களை குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பாமல் காலம் தாழ்த்தி வரும் ஆளுநர் திரு. ஆர்.என்.இரவி அவர்களை ஒன்றிய அரசு திரும்பப் பெற்று, சனநாயக மாண்பினைக் காக்க வேண்டும் என்பதில் எவருக்கும் இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது. ஆளுநர் பதவியில் இருப்பவர் எந்தக் கட்சியை சாராமலும், நடுநிலையாகச் செயல்பட வேண்டியதும் முக்கியம். ஆனால் ஒன்றிய அரசின் கைப்பாவையாகச் செயல்படும் ஆளுநர் அவர்களைத் திரும்பப் பெற்று சனநாயகம் தழைத்தோங்க ஆவன செய்ய வேண்டும் என்று பேரவையின் சார்பாக ஒன்றிய அரசிற்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

உலகெங்கும் உள்ள தமிழர்களின் உயர்வினையும், தமிழின் ஏற்றத்தையும் இரு கண்ணெனக் கொண்டு பேரவை துடிப்புடன் செயலாற்றுகிறது. இந்த மாபெரும் பணியில் எங்களுடன் இணைந்து செயலாற்றும் உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளையும், இனிய தமிழர் திருநாள் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்

முனைவர் பாலா சுவாமிநாதன், நியூயார்க்

ஆசிரியர் கடிதம்

நதியானது காடு மலைகளையும், மேடு பள்ளங்களையும், கடந்து நீர் எழுச்சியாக பிரம்மாண்டமாய் 'சோ' என்ற ஓசையுடன் வீழும் அழகைப் பார்த்தவுடன் தோன்றும் பேருவகை போல், பல தமிழ் நெஞ்சங்களின் சங்கமமாய் இந்த அருவி இதழ் உங்கள் கரங்களில் தவழும் போது உங்கள் உள்ளத்திலும் அதே மகிழ்ச்சி நிலை கொள்ளும் என்று நம்புகிறேன். அனைவருக்கும் முதலில் புத்தாண்டு நல் வாழ்த்துகளையும், தமிழர் திருநாள் நாள் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்'

என்று புறப் பொருள்கள் சார்ந்து மட்டுமே தமிழர் திருநாளைக் கொண்டாடாமல் தமிழர் பழம்பெருமையை நிலைநிறுத்தும் பல விடயங்களை, மீண்டும் தமிழ்ச் சமூகம் அறியத் தருவது, பழையன எல்லாமும் புறம் தள்ள வேண்டியவை அல்ல என்பதையே நமக்கு உணர்த்துகிறது.

சங்க இலக்கியப் பேருரைகள், "நாகரீகத்தின் பயணம் - சிந்து சமவெளி முதல் வைகை வரை" என்ற பெயரில் வைகைக் கரை நாகரீகத்தைப் பற்றி பலரும் அறிய பேரவை ஏற்படுத்தியுள்ள கூட்டு வகுப்புகள், கடைச்சங்க காலம் தொடங்கி இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டு வரை உள்ள தமிழ் எழுத்துக்கள், அதன் வடிவங்கள், அதன் பரிணாம வளர்ச்சி ஆகியவற்றை அறிய தமிழக தொல்லியல் துறை மேற்கொண்டுள்ள நடுகற்கள் பற்றிய ஆய்வுகள், அரிக்கன்மேடு, காவிரிப்பூம்பட்டினம், ஆதிச்சநல்லூர், கீழடி உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்படும் அகழ்வாராய்ச்சி வழி சங்க இலக்கியத்துடன் ஒரு இறுக்கமான பிணைப்பை ஏற்படுத்தும் பணிகள் என்று பழமையைக் கொண்டாடும் முக்கியமானதொரு தருணத்தில் நாம் இருக்கிறோம். அறிவியல் தொழில்நுட்பம் வளராத காலத்திலேயே,

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என்று பரந்துபட்ட பார்வையைக் கொண்ட தமிழ் இனம், தொழில் நுட்பம் வளர்ந்த இக்கால கட்டத்தில் இன்னும் உயரிய சிந்தனைகளை மனதில் இருத்த வேண்டியதும், அதை இவ்வுலகத்திற்கு எடுத்துச் சொல்லும் நிலையில் தன்னை வைப்பதும் மிகவும் முக்கியம் வாய்ந்தது. எனவே, நம்மிடைய உள்ள பேதங்களை, வேற்றுமைகளைக் களைந்து பண்பட்ட மனிதர்களாக, தன்னலம் கருதாது பொது நலத்தைப் பேணிக் காப்பவர்களாகத் திகழ வேண்டும். ஏனெனில் நமது அடுத்த தலைமுறை நாம் சொல்வதை அல்ல, நாம் செய்வதை மட்டுமே கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. தமிழர் பண்பாடானது, வாழையடி வாழையாய் ஒரு தலைமுறையிடம் இருந்து அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படும் ஒன்று. அப்பண்பாட்டுக் கடத்திகளாகவே தமிழர் விழாக்களும், கொண்டாட்டங்களும், வாழ்வியல் முறைகளும் அமைந்துள்ளன. எனவே இத்தமிழர் திருநாளில் மேன்மை பொருந்திய குறிக்கோள்களை நோக்கிச் செல்வதையே நமது இலக்காகக் கொள்வோம். சீரிய வாழ்க்கை நெறிகளை எடுத்துச் சொல்லும் நமது இலக்கியங்களை நமது பாதையின் விளக்காகக் கொள்வோம். புதியதொரு மறுமலர்ச்சியை நமது உள்ளங்களிலும், இல்லங்களிலும், இவ்வையகத்திலும் ஏற்படுத்துவோம் என்றே உறுதி கொள்வோம்.

சாக்ரமெண்டோவில் நடக்கவிருக்கும் 36-வது பேரவை விழா, சென்னையில் நடக்கவுள்ள FiTEN விழா பற்றிய செய்திகளையும் இந்த இதழில் காணலாம். கொரோனா பெருந்தொற்றினால் மெய்நிகராக நடைபெற்ற பல்வேறு தமிழ்ச் சங்க நிகழ்வுகள் தற்சமயம் நேரடியாக நடைபெறுகின்றன. இவ்வாறு நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகள் பற்றிய செய்திகளையும் தொகுத்து அளித்துள்ளோம். இச்செய்திகளை உரிய முறையில் தொகுத்தளித்த தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர்களுக்கு, அருவி மலர் குழுவினரின் நன்றிகளை உரித்தாக்குகிறேன். இந்த அருவி இதழ் சிறப்பாக மலர பின்னின்று உழைத்த அருவி ஆசிரிய குழுவில் உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றிகள் பல. அருவி இதழ் வெளியாகும் இந்தப் பனிக்காலத்தைக் காட்டும் வகையிலும், தமிழர் கலைகளை நினைவுபடுத்தும் விதமாகவும், இரு ஓவியங்களை, முன் அட்டைக்காக வரைந்தளித்த வரைந்தளித்த திருமிகு ஷீலா ரமணன், சான் ஆண்டோனியோ, டெக்சாசு அவர்களுக்கும் மிக்க நன்றி.

அன்புடன்

இரம்யா ரவீந்திரன்

சார்லட், வட கரோலைனா

வாழ்த்துவோம் வாரீர்!!!

மேதகு திரௌபதி மர்மு

பழங்குடி வகுப்பில் பிறந்து, பல்வேறு துன்பங்கள், இடர்ப்பாடுகள் இவற்றையெல்லாம் தாண்டி, ஆளுநர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்து, தலைமைத்துவத்தில் ஆழ்ந்த அனுபவம் பெற்று "நாட்டின் முதல் குடிமகள்" என்ற பெருமையோடு இந்தியாவின் 15 ஆவது குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள மேதகு திரவுபதி முர்மு அவர்களுக்கும்,

திரு சசீந்திரன் முத்துவேல்

தமிழகத்தில் பிறந்து, இந்திய அரசால் வெளிநாடு வாழ் இந்தியருக்கான பெருமை மிகு விருதான, 'பிரவாசி பாரதீய சம்மான்' பெற்றவரும், பப்புவா நியூ கினி நாட்டில் உள்ள நியூ வெஸ்ட் பிரிட்டன் மாகாணத்தின் ஆளுநராக மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேதகு சசீந்திரன் முத்துவேல் அவர்களுக்கும்,

திருமதி நல்லதம்பி கலைச்செல்வி

இந்தியா முழுவதும் உள்ள 38 ஆராய்ச்சி நிறுவனங்களின் கூட்டமைப்பை வழி நடத்தும் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி கவுன்சிலின் (CSIR) முதல் பெண் இயக்குனராகத் தேர்வு செய்யப்பட்ட முனைவர் திருமதி நல்லதம்பி கலைச்செல்வி அவர்களுக்கும்

பேரவை வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமை கொள்கிறது.

திரு. ஆறுமுகம் பேச்சிமுத்து

அமெரிக்கத் தமிழ் வானொலி நிறுவனரும், வடஅமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் மேனாள் செயலாளரும், சான் பிரான்சிஸ்கோ வளைகுடாப் பகுதி தமிழ்மன்றத்தின் மேனாள் தலைவராகவும் இருந்த சிறப்புகளைப் பெற்றவர்.

சார்லட் நகர தமிழ்ச் சங்கம்

சார்லட் நகர தமிழ்ச் சங்கத்தின் 2022 ஆம் ஆண்டிற்கானப் பொங்கல் விழா, சமையல் போட்டி, பொம்மை செய்யும் போட்டி, மாயக்குரல் வித்தகி செல்வி நிரஞ்சனாவின் சிறப்பு நிகழ்ச்சி மற்றும் சங்க உறுப்பினர்களின் கலைநிகழ்ச்சிகள் என கோலாகலமாக பிப்ரவரி 12ஆம் தேதி கொண்டாடப்பட்டது. கல்லூரி செல்லும் பிள்ளைகளின் வழிகாட்டுதலுக்காக, கல்லூரிகளுக்கு விண்ணப்பித்தல் மற்றும் சேர்க்கை முறைக்கான வழிமுறைகளை 'College Career Coach' திரு.ரகுராம் சுகுமார் உறுப்பினர்களுடன் மெய்நிகராகப் பகிர்ந்து கொண்டார்.

நாம் வாழும் சமுதாயத்தின் தொடர் வளர்ச்சிக்குப் பங்களிக்கும் வண்ணம் சார்லட் நகர தமிழ்ச் சங்கத்தின் இளைஞர் குழு "Charlotte-Mecklenburg Storm Water Services" நடத்திய "Tree Maintenance" நிகழ்ச்சியிலும் , "Adopt-A-City Street Program" (Adopt-A-City Street Program, Keep Charlotte City Streets Litter free) என்னும் சார்லட் நகரைத் தூய்மைப்படுத்தும் நிகழ்ச்சியிலும், "NC MedAssist" நடத்திய தன்னார்வலத் தொண்டு நிகழ்ச்சியிலும், பிப்ரவரி, மார்ச் மற்றும் ஜூன் மாதங்களில் பங்குகொண்டனர்.

சார்லட் பெருநகர பொது நூலகங்களில் தமிழ் நூல்களைக் கொண்டு சேர்க்கும் முயற்சியின், ஒரு கட்டமாக, சார்லட் தமிழ்ச் சங்கம், சார்லட் நூலகக் குழு என்னும் தன்னார்வல அமைப்புடன் இணைந்து தமிழ்ப் புத்தகக் கொடையளித்தது.

சார்லட் தமிழ்ச் சங்கம் மருத்துவம் தொடர்பான பல்வேறு நிகழ்ச்சிகளை மருத்துவ நிபுணர்களின் உதவியுடன் அளித்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக மருத்துவர். திரு.பழனியப்பன் மாணிக்கம் அவர்களுடனான மருத்துவ உரையாடல் மற்றும் சித்த மருத்துவர்கள் திரு.செல்வ சண்முகம், திரு.அருள் அமுதன் அவர்களுடனான கலந்துரையாடல் முறையே ஏப்ரல் மற்றும் ஜூலை மாதத்தில் நடத்தப்பட்டது.

மே மாதம் நடைபெற்ற சித்திரைத் திருவிழாவின் ஒரு பகுதியாகத் தன்னார்வலர்களால் சமைக்கப்பட்ட அறுசுவை விருந்து சுமார் 1000 உறுப்பினர்களுக்கு வாழையிலை விருந்தாகப் பரிமாறப்பட்டது. சித்திரைத் திருவிழாவில் செவிக்கு விருந்தாக 'அமெரிக்க பட்டிமன்றங்களின் சாலமன் பாப்பையா' என புகழப்படும் திரு.அகத்தியன் ஜான் பெனடிக்ட் நடுவராக அமர்ந்த சிறப்புப் பட்டிமன்றம் இளவல்களின் பங்கேற்போடு, மக்களின் பேராதரவைப் பெற்றது. சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒரு குடும்பமாய் ஒன்றிணையும் கோடைக் கொண்டாட்டம் பல்வேறு விளையாட்டுகளுடன் செப்டம்பர் மாதத்தில் இனிதே நடந்தேறியது.

"நம்மால், நமக்காக நடத்தப்படும் சங்கம்" என்பதை என்றும் நினைவில் கொண்டு சார்லட் நகர தமிழ்ச் சங்க செயற்குழு தற்போது வரும் 2023 ஆம் ஆண்டிற்கான பொங்கல் நிகழ்ச்சிக்கான பணிகளில் முழு மூச்சாக இயங்கி வருகிறது.

சான் ஆண்டோனியோ தமிழ்ச் சங்கம்

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுவதைப் போலவே இவ்வாண்டும் சிறுவர்கள் மற்றும் பெரியவர்களுக்கானப் பல விளையாட்டுப் போட்டிகள் ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடைபெற்றன. ஆகஸ்ட் மாதம் இன்பச் சுற்றுலா, நம் கிராமத்து விளையாட்டுகள், உணவு வகைகள் மற்றும் இசை நிகழ்வுகள் இனிதே நடந்தது. அக்டோபர் மாதத்தில் நடைபெற்ற சங்கத்தின் தீபாவளி நிகழ்ச்சியானது பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையில் விமரிசையாகவும், தொடர்ந்து, நவம்பர் மாதத்தில், அனைத்து இந்திய மாநிலங்களின் ‘இந்தியா வெஸ்ட்’ ல் நடைபெற்ற அணி வகுப்பு நிகழ்வு பறை இசையோடு நடந்ததும் சிறப்பு!

அடுத்து ‘Diwali SA’ என்ற அனைத்து மாநில நிகழ்வில் படகில் வலம், நடனம் மற்றும் கோலப் போட்டி என

அமர்க்களப்பட்டது. இதில் கோலப் போட்டியில் நம் தமிழ்நாடு முதல் இடத்தைப் பிடித்து அனைவரது பாராட்டுக்களைப் பெற்றது மிகச் சிறப்பு! டிசம்பரில் மகாகவி பாரதியின் பிறந்தநாள் விழா பலவித கலைநிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது.

நினைவில் நின்றவர்கள்

அமெரிக்கத் தமிழ் முன்னோடி

பண்ணைக்காடு சுப்பிரமணியம்

சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் முன்னோடி, அணு உலைபோன்ற திட்டங்களில் சிறப்புப் பொறியாளர், பழனி மகளிர்க் கல்லூரியின் நிறுவனர்.



மில்வாக்கி மாநகர தமிழ்ச் சங்கம்

திருவள்ளுவர் திருநாள் மற்றும் பொங்கல் விழா ஆகிய இரண்டையும் இணைத்து பிப்ரவரி மாதம் திருவள்ளுவரின் திருவுருவச் சிலை நியூ பெர்லின் பொது நூலகத்தில் மதிப்பிற்குரிய மேயர் திரு.கவாலியர் ஜான்சன் அவர்களால் திறந்து வைக்கப் பட்டது. தற்போது மில்வாக்கி மேயரின் அலுவலகத்தில் திருவள்ளுவர் சிலையாக வீற்றிருக்கிறார்!

நேரலை நிகழ்ச்சிகளாக திருமதி.மைதிலியுடன் யோகா நிகழ்ச்சி, கைரோபிராக்டர் மருத்துவர் கர்ஸ்கியுடன் நேர்காணல், மங்கையர் தின சிறப்பு நிகழ்ச்சியாக ஊட்டச்சத்து நிபுணர் திருமதி. அலமேலு வைரவனுடன் பேட்டி, வேலை வாய்ப்பு பற்றி விஸ்டம் இன்போடெக் நிறுவனர் திரு.சுரேஷ் தங்கவேலுவுடன் கலந்துரையாடல் ஆகியவை ஒளிபரப்பப்பட்டன. ஜூன் மாதம் நேதன் ஹேல் பள்ளியில் தமிழ்ப் புத்தாண்டு விழா நடைபெற்றது. சன் தொலைக்காட்சி “கொஞ்சம் நடிங்க பாஸ்” புகழ் ஆதவன், பல குரல்களில் பேசி, பாடல்கள் பாடி, விளையாட்டு நிகழ்ச்சியையும் நடத்தி, வந்திருந்த ஏராளமான தமிழ்க் குடும்பங்களை மகிழ்வித்தார்.

Adopt a Highway: GMTS தன்னார்வலர்கள், சாலையோரங்களில் சுத்தம் செய்யும் பணியை இந்த ஆண்டு கோடை காலத்தில் மூன்று முறை செய்தனர். ஆகஸ்ட் மாதம் கோடைச் சுற்றுலா, விளையாட்டுகள் மற்றும் சுவையான உணவுடன் சிறப்பாக நடைபெற்றது. நாற்பது குடும்பங்களுக்கு மேல் கலந்து கொண்டனர். GMTS செயற்குழுக் கூட்டம் அக்டோபர் மாதம் நடந்தது. மில்வாக்கி தமிழ்ச் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டு வரும் ஆண்டுகளில் சங்கத்தின் பணிகள் பற்றி விவாதித்தனர். வரும் புத்தாண்டில் பல புது முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

Ottawa Tamil Association

ஒட்டாவா தமிழ் ஒன்றியம்

ஒட்டாவா தமிழ் ஒன்றியம் வழமை போன்று தை மாத தமிழ் மரபுத் திங்கள் விழாவுடன் 2022 ஆண்டைத் தொடங்கியது. பெரும் தொற்று நீடிப்பதன் காரணமாக,இந்த ஆண்டும் மெய்நிகர் வழியாக தமிழ் மரபுத் திங்கள் விழா நடைபெற்றது. இரு மணி நேர நிகழ்வுகள், கனடிய அரசு ஒன்றாரியோ அரசு மற்றும் ஒட்டாவா நகர பிரதிநிதிகளின் உரைகளுடன் தமிழ் மரபு சார் கலை நிகழ்வுகளுடன் தமிழீழ வரலாறு மற்றும் தமிழின அழிப்பிற்கு நீதி பற்றிய சிறப்புரைகளுடன் பல ஆயிரம் மக்கள் பார்க்கும் வகையில் IPTV மற்றும் இணையம் வழியாக நடைபெற்றது.*https://youtu.be/vMj5XtzYwa8.*

ஒட்டாவா தமிழ் ஒன்றியமும் பல கனடிய தமிழ் அமைப்புகளும் ஒருங்கே தமிழின அழிப்பு நினைவு நாளை கனடிய பாராளுமன்ற முன்றலில் ஒழுங்கு செய்திருந்தனர். மே 18, 2022 அன்று கனடிய பாராளுமன்றம் சிறிலங்கா அரசினால் தமிழின அழிப்பு நடைபெற்றதை ஓர் முன் மொழிதல் மூலமாக அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அத்துடன் மே 18 ஐ தமிழின அழிப்பு நினைவு நாள் எனவும் வழி மொழிந்தனர். பல வருடமாக கனடிய தமிழ் அமைப்புகளும் ஒட்டாவா தமிழ் ஒன்றியமும் விடுத்து வந்த கோரிக்கை ஒன்றுக்கு கனடிய பாராளுமன்றம் செவிமடுத்து தமிழ் மக்களுக்கு நீதிக்கான சிறு ஒளியொன்றைக் காட்டி நம்பிக்கை ஊட்டியிருந்தது.

https://www.einpresswire.com/article/573298886/canadian-parliament-recognizes-the-genocide-of-tamils-in-sri-lanka-and-tamil-genocide-remembrance-day-may-18

தியாகி திலீபன் நினைவு நிகழ்வாக கனேடிய உணவு வங்கிக்கு உணவுப் பொருளை நன்கொடை வழங்கி இருந்தது. நியூயார்க்கில் நடைபெற்ற வட அமெரிக்க தமிழ்ச்சங்க பேரவையின் (FetNA) 35 ஆவது பேரவை தமிழ் விழாவிலும் மற்றும் உலக தமிழ் அமைப்புகளின் பேரவை(FGTO) விழாவிலும், ஒட்டாவா தமிழ் ஒன்றியம் கலந்து கொண்டது.

அழகன்குளம், வைகை நதியின் கரையில் உள்ள ஒரு கிராமம் என்பது நாம் அறிந்ததே. அழகன் என்பது இன்று ஆப்கானிஸ்தானில் உள்ள ஒரு கிராமத்தின் பெயரும் கூட என்பது உங்களுக்குத் தெரியுமா?

நியூயார்க் தமிழ்ச் சங்கம்

1970-2020 பொன்விழா GOLDEN JUBILEE NEWYORK TAMIL SANGAM

பொன் விழாக் கண்ட நியூயார்க் தமிழ்ச் சங்கம், கொரோனா பேரிடர் தொற்றுக்குப் பின் நவம்பர் 5 ஆம் தேதியன்று நேரிடை விழாவாக, தீப ஒளித்திருநாள் பெரும் மகிழ்வோடு கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் குழந்தைகளின் ஆடல், பாடல்கள், தாயகத்திலிருந்து வந்திருந்த முனைவர் திருமிகு இ. ஜே. சுந்தர் அவர்களின் "உலகத்தமிழ்க் களஞ்சியம் ஓர் அறிமுகம்" சிறப்புரை, CBS தொலைக்காட்சியில் 2019-ம் ஆண்டு "The World's Best" என்ற பட்டத்தை வென்ற இளம் இசைக்கலைஞர் திரு. விடியன் நாதஸ்வரம் மற்றும் அவரது சகோதரி அமிர்தவர்ஷிணி ஆகியோரின் இசைவிருந்து போன்ற நிகழ்வுகள் நடந்தன. மேலும் இவ்விழாவில் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் மேனாள் தலைவர் திரு. கால்டுவெல் வேள்நம்பி, இந்நாள் தலைவர் முனைவர் பாலா சுவாமிநாதன், மற்றும் 2022 பேரவை விழா ஒருங்கிணைப்பாளர் திரு. அரங்கநாதன் உத்தமன், நியூயார்க் தமிழ்ச்சங்கத் தலைவர் திரு.ராம் மோகன் ஆகியோர் ஜூலை 1,2,3,4 தேதிகளில் நியூயார்க் நகரில் கோலாகலமாக நடந்து முடிந்த 35 வது பேரவை விழாவிற்கு உழைத்த தன்னார்வலர்களுக்குப் பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தனர். இறுதியாக, இவ்வருட பேரவை விழாவில் சுவையான உணவு அளித்த ரஜினி நியூஜெர்சி உணவகத்தினரின் சுவைமிக்க இரவு விருந்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

திரு. இராதாகிருஷ்ணன் குன்னத்

வாஷிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கப் பேரவையின் மேனாள் செயற்குழு உறுப்பினர், ஹார்வேர்டு தமிழ் இருக்கை உள்ளிட்ட பல்வேறு தமிழ் சார்ந்த முன்னெடுப்புகளுக்கு ஒத்துழைப்பு நல்கியவர்.



அது ஒரு பொற்காலம்...!

கவிஞர் திரு. ஜெயபாஸ்கரன்

அதுவொரு பொற்காலம்
தைப்பொங்கல் விழாக்கோலம்
அழுது கொண்டே தேடுகிறேன்
இந்நாளில் அது காணோம்!

மார்கழியின் காற்றடிக்கும்
மார்புக்குள் குளிரடிக்கும்
மஞ்சள் நிறப் பூசணிப்பூ
மனம் கவரும் மடல்விரிக்கும்!

ஆடுகளும் மாடுகளும்
பறவைகளும் சேர்ந்திசைக்கும்
அதிகாலைப் பொழுதுகளில்
அப்படியோர் சுகமிருக்கும்!

கால்புதையும் சேற்றினிலே
கலப்பைகளை ஏர் இழுக்கும்
காளைகள் கேட்பதற்குக்
கணீரெனப் பாட்டொலிக்கும்!

கன்னிப் பெண்களது
கலகலப்புச் சிரிப்பொலியில்
கதிர் ஏந்திப் புன்னகைத்துக்
காளையினம் கதிரடிக்கும்!

மஞ்சள் மடல்வாழை
மாவிலைத் தோரணங்கள்
வேம்பு பிரண்டையென்று
வீடெங்கும் தழைமணக்கும்!

துதிக்கைக் கடவுளெனத்
திரட்டி வைத்த சாணத்தில்
தும்பைப்பூ சிரிக்க
அருகம்புல் புதைந்திருக்கும்!

உற்றார் உறவோர் என்று
ஊர்கூடி நலம் வினவும்

ஒவ்வொருவர் உடல்மீதும்
புத்தாடை மணம் கமழும்!

மணமகளைக் காண்பதற்கும்
மாப்பிள்ளை பிடிப்பதற்கும்
மனதுக்கு உகந்ததெனத்
தைமாதம் கைகொடுக்கும்!

கொடுங்கோடை வெப்பத்தில்
ஒதுங்குவதும் இல்லாமல்
கார்கால அடைமழையில்
ஒடுங்குவதும் இல்லாமல்
மார்கழி முடிந்தபின்பு
மலருகின்ற புதுமாதம்
மனக்குளிர்ச்சி மிகுந்தவோர்
தமிழ் மாதம் தை மாதம்!

காய்ந்து போன கார்த்திகை
ஒருநாள்தான் வந்துபோகும்
தீய்ந்துபோன தீபாவளியும்
ஒருநாள்தான் வந்துபோகும்
மூன்றுநாள் பொங்கலில்தான்

மூச்சுமூட்டும் உணவென்று
மூத்தவர்கள் இளையவர்க்குப்
பழமொழியாய்ச் சொல்வார்கள்!

போகி போச்சு பொங்கல் வந்தது
பொண்ணுகுடு மாமாவென்று
பறையறைந்து சிறுவர்கூட்டம்
பாடலொன்றை இசைக்கும்!

'போக்கத்த பசங்களே
போங்கடா' எனச் சொல்லி
பிரம்பெடுத்து விரட்டிவிட்டுப்
பாட்டியினம் சிரிக்கும்!

சிறுகடல்போல் நீர்நிறைந்து
சித்தேரி ததும்பும்
சிறகுலர்த்த நீர்க்காகம்
கரைநெடுக ஒதுங்கும்!

வான் முழுதும் பறவையினம்
வரிசைகளாய் நகரும்
வண்ண வண்ணப் பறவைகளால்
மரக்கிளைகள் மலரும்!

புத்தரிசி உலைபொங்கி
பூப்போல வழிய
புது அடுப்பும் அதன் நெருப்பும்
புகைசூழக் கமழ
பொங்கலோ பொங்கலென்று
பொங்கியெழும் முழக்கம்,
புதுநெல்லை விளையவைத்த
வயல்வெளிக்கும் கேட்கும்!

அதுவொரு பொற்காலம்
தைப்பொங்கல் விழாக்கோலம்
அழுதுகொண்டே தேடுகிறேன்
இந்நாளில் அது காணோம்!

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams of North America (FeTNA)
A Registered - Non-Profit, Tax exempt 501(C)(3) Organization
Federation of Tamil Sangams North America SINCE 1988
2022-24 புதிய செயற்குழு உறுப்பினர்களுக்கு
மனமார்ந்த வாழ்த்துகள்
PRESIDENT
Dr. BALA SWAMINATHAN
VICE PRESIDENT
MR. VIJAY MANIVEL
SECRETARY
MR. KINGSLY SAMUEL
TREASURER
MR. BALAMURALI KOTHANDARAMAN
JOINT SECRETARY
MR. SIVAN ILANGKO
ASSISTANT TREASURER
MR. EZHILAN RAMARAJAN
DIRECTOR
MR. ASOKAN THANGARAJU
DIRECTOR
MRS. JANSIRANI PRABAKARAN
DIRECTOR
MR. JOHN BRITTO
DIRECTOR
MRS. RAMYA RAVINDRAN
BOARD MEMBER
MRS. BAMIELA VENKAT
YOUTH MEMBER
MR. AMARAN KANDIAR
YOUTH MEMBER
MS. YAMIKA RAMESH

மிச்சிகன் தமிழ்ச் சங்கம்

மிச்சிகன் தமிழ்ச் சங்கத்தின் புதிய செயற்குழு (2022-2024) ஜூலை மாதத்தில் பொறுப்பேற்றவுடன் ஒருங்கிணைத்த நிகழ்ச்சிகள் பின் வருமாறு:

1. மிச்சிகன் தமிழ் உறவுகளை ஓரிடத்தில் ஒன்று சேர்த்து சுற்றங்கள் புடை சூழ "குளு குளு கோடைக் கொண்டாட்டம்" என்ற தலைப்பில் கோடை விழா ஆகஸ்ட் மாதம் 14 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

2. இந்திய சுதந்திர தினத்தை முன்னிட்டு மிச்சிகனில் உள்ள அனைத்து இந்திய மொழி சங்கங்களும் ஒன்று சேர்ந்து ஆகஸ்ட் 20 அன்று ஒருங்கிணைத்த இந்தியத் திருநாள்(India day) அணிவகுப்பில் மிச்சிகன் தமிழ்ச் சங்கம் கலந்து கொண்டு தமிழ் மொழி, இனம் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை எடுத்தியம்பியது.

3. மிச்சிகன் தமிழ்ச் சங்கம் என்பது வெறுமனே கலை நிகழ்ச்சிகள் மட்டுமின்றி இலக்கியத்தையும் மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் முனைப்போடு செயல்படும் அமைப்பு என்பதை மெய்ப்பிக்கும் வகையிலும், தமிழ் ஆர்வலர்களுக்குத் தீனி போடும் விதத்திலும் ஆகஸ்ட் 27 அன்று "இலக்கிய மாலை" என்ற நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

4. பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் 144-வது பிறந்த நாளை முன்னிட்டு மிச்சிகன் தமிழ்ச் சங்கம் முன்னெடுத்த குழந்தைகளுக்கானப் பேச்சுப் போட்டி நிகழ்ச்சி செயற்குழுவின் கூட்டு முயற்சியால் செப்டம்பர் 22 அன்று இணையவழி நேரலை நிகழ்ச்சியாகச் சிறப்பாக நடைபெற்றது.

5. தமிழ் இலக்கியங்களில் அதிக வாசகர்களை ஈர்த்த நூல்களில் ஒன்றான பொன்னியின் செல்வன் என்ற புதினத்தைத் தழுவி திரைப்படம் வெளியானதை மக்கள் மத்தியில் கொண்டுச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் "போட்டி போடு பொன்னியின் செல்வனோடு" என்ற நிகழ்ச்சி செப்டம்பர் 27 அன்று இணையவழி நேரலை நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது.

6. மிச்சிகன் தமிழ்ச் சங்கம் வருடந்தோறும் நடத்தும் தீபாவளி நிகழ்ச்சி "நம்ம வீட்டு தீபாவளி 2022" என்ற தலைப்பில் நவம்பர் 5 அன்று சிறப்பாக நடைபெற்றது. மேலும் இந் நிகழ்ச்சி பல்சுவை உணவு, நடனம், நாடகம், இசைக் கச்சேரியுடன் நடந்தேறியது.

குயவர்களைக் 'கோ' என்று நம் சங்க காலத் தமிழர்கள் கொண்டாடினார்கள். 'கலம் செய்யும் கோவே' என்று நம் சங்க இலக்கியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொலம்பஸ் தமிழ்ச் சங்கம்

கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் முதன் முறையாக மேசை பந்தாட்டப் போட்டியை மார்ச் 19 ஆம் தேதி நடத்தியது. இந்தப் போட்டியில் சிறுவர் முதல் பெரியவர் வரை பலரும் கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி மகிழ்ந்தார்கள். கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் தொடர்ந்து மரபுக் கல்வி கலைக்கூடத்துடன் இணைந்து, நிகழ் நிலையில் சிலம்பம் பயிற்சிகளை நடத்தி வருகிறது. ரத்தீஷ் ஆசானும் பீவின் ஆசானும் மிகவும் சிறப்பாக நம் கொலம்பஸ் வாழ் பிள்ளைகளுக்கு உடலையும் மனதையும் திடமாக்கும் பயிற்சிகளை வழங்கி வருகிறார்கள். ஈரோடு மகேஷ் உடன் இணைந்து "சொல்லுங்க வெல்லுங்க" என்ற நிகழ்ச்சி நிகழ் நிலையில் மார்ச் 7 ஆம் தேதி சிறப்பாக நடந்து முடிந்தது.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். இன்று கடல் கடந்து வந்து வாழ்ந்தாலும் நம் அனைவரின் தொடக்கமும் நம் பெற்றோர்கள் தான். கடந்த இரு ஆண்டுகளாக கொரோனாவால் தாயகம் செல்ல முடியாமல் இங்கிருப்பவர்களும், நம்மை வந்து பார்க்க முடியாமல் பெற்றோர்களும் இருந்தனர். இந்த வருடம் மீண்டும் இயல்பு நிலைமைக்குத் திரும்பியவுடன் பலரின் பெற்றோர் தங்களின் மகன் அல்லது மகள் குடும்பத்தினரைப் பார்க்க வந்திருந்தனர். அப்படி நம்ம கொலம்பஸ்க்கு வந்திருந்த பெற்றோர்களுக்காக முதன் முறையாக ஒரு பொன் மாலைப் பொழுதை கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் தமிழ்த் திண்ணையுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

கொலம்பஸ் தமிழ்ச் சங்கம் கடந்த அக்டோபர் மாதம் 'பிக்னிக் டே' என்ற நிகழ்ச்சியைச் சிறப்பாக நடத்தியது. இதில் பல்வேறு நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன. குறிப்பாக, இந்த நிகழ்ச்சில் எழுநூற்றுக்கும் (700 +) அதிகமான தமிழ் சொந்தங்கள் பங்கு பெற்றார்கள். அனைவருக்கும் சிறப்பான மதிய உணவு, மாலை சிற்றுண்டி, நீர்மோர் மற்றும் தேநீர் வழங்கப்பட்டது.

"பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்
வீங்குநீர் வேலி யுலகிற் கவன்குலத்தோடு
ஓங்கிப் பரந்தொழுக லான்."

சிலப்பதிகாரம் மங்கல வாழ்த்துப் பாடல்

இளங்கோவடிகள் முறையே திங்கள், ஞாயிறு மற்றும் மழையோடு சேர்த்துப் பூம்புகார் நகரத்தையும் வாழ்த்தித் தமிழின் முதல் காவியமான சிலப்பதிகாரத்தைத் தொடங்குகிறார்.

ஜாக்சன்வில் தமிழ் மன்றம்

தொடர்ந்திணைந்துள்ள ஐக்கிய அமெரிக்காவின் பெருநகரமாம் ஜாக்சன்வில்லில், நிறைந்து வாழக் கூடிய தமிழ்க் குடும்பங்களுக்காக நடத்தப்படுகிறது ஜாக்சன்வில் தமிழ் மன்றம்(JTM).இருபது ஆண்டுகளாகச் செயல்படும் இம்மன்றம், இந்த ஆண்டு (2022) எண்ணற்ற நிகழ்ச்சிகளைக் கூட்டாகவும், உற்சாகமாகவும், கோலாகலமாகவும் நடத்திக் கொண்டு வருகிறது. தைத் திருநாளாம் பொங்கல் திருநாளில், விழாக் கோலம் பூண்டு பொங்கலிட்டு, வீரவிளையாட்டுகளுடன் தொடங்கியது, இந்தாண்டு நிகழ்ச்சிகள். கவிதைப் போட்டி, கையெழுத்துப் போட்டி, ஆடல் பாடல் நிகழ்ச்சிகள், ஒரு நாள் சுற்றுலா, மிதிவண்டி பயிற்சி, நடைப் பயிற்சி, யோகா, இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்கான கைப்பந்து, மட்டைப்பந்து, பூப்பந்து, டென்னிஸ். பெண்களுக்கான பந்து வீசுதல் என்று விளையாட்டிலும் கலையிலும் சமபங்கு அளித்து இந்த ஆண்டு பல கலை நிகழ்ச்சிகளை நடத்தி விருதுகளையும் வழங்கி கௌரவித்துள்ளது இம்மன்றம்.

கூடுதல் சிறப்பாக, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை பரிசளித்த திருவள்ளுவர் சிலையை வரவேற்கும் விதமாக இலக்கியக் குழு சார்பாக "சிலை வரவேற்பு சிறப்பு நிகழ்ச்சியை" நடத்தியது. இதில் "தம் மக்கள் மழலைச்சொல் கேளாதவர்" என்றவருக்கு மழலை மொழிகளின் வாயிலாகவே குறளையே மாலையாக்கி அழகு பார்த்தது இம்மன்றம்.

மேலும் பார்வையற்ற பள்ளிக்குத் தேவையான பொருட்களை உதவியதும், இலக்கிய மன்றம் மூலம் இலக்கிய நிகழ்ச்சிகள், கூட்டங்கள், விவாதங்கள் நடத்தியதும் குறிப்பிடத்தக்கது. வரலாற்றாளர்கள் - திரைஆர்வலர்கள் இடையே நடந்த "கல்கியின் பொன்னியின் செல்வன் Vs PS-1" பட்டிமன்றம் பார்வையாளர்களைக் கவர்ந்தது. வெளியூர் கலைஞர்களையும் திரைப் புகழ் பாடகர்களையும் அழைத்து வந்து இசைமழையில் நனைய வைத்தது மேலும் ஒரு சிறப்பு அம்சமாகும். வரப்போகும் ஆண்டுகளில் நிகழ்ச்சிகளை இன்னும் சிறப்பாகவும், பிரம்மாண்டமாகவும் நடத்தத் திட்டமிட்டுள்ளது இம்மன்றம். ஜாக்சன் வில்லில் தமிழ் சொந்தங்கள் கூடி மகிழ, பன்மடங்கு வளர, தொடர்ந்து தமிழ் வளர்ப்போம் என்பதில் எங்களுக்கு எந்த ஐயமுமில்லை.

மத்திய இல்லினாய்ஸ் தமிழ்ச் சங்கம்

மத்திய இல்லினாய்ஸ் தமிழ்ச் சங்கம் கோடை விழா, திருவள்ளுவர் சிலை திறப்பு விழா, தீபாவளி ஆகிய விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடியது. அய்யா அப்துல் கலாம் மற்றும் நடிகர் பத்மசிறீ விவேக் நினைவால் நடப்பட்ட மரங்களைச் சங்கத்தின் அங்கத்தினர் பார்வையிட்டனர். திருவள்ளுவர் சிலை பேரவையால் எங்கள் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. சிலை திறப்பு விழாவில் ஒரு குறளுக்கு ஒரு வெள்ளி என்ற வகையில் பரிசு வழங்கி சிறுவர்களை ஊக்குவித்தோம். இயல்பு நிலை திரும்பியதால் கல்லூரி மாணவர்களையும் அழைத்து பேருவகையுடன் பொங்கல் விழாவினைக் கொண்டாடவுள்ளோம். சளைக்காமல், அறுசுவை உணவு சமைத்த அனைவரும் நன்றி.

“குறும் பொறை உணங்கும் ததர் வெள் என்பு
கடுங் கால் ஒட்டகத்து அல்கு பசி தீர்க்கும்...” (அகநானூறு 245)

என்ற பாடல் வறட்சியால் பசித்திருக்கும் ஒட்டகம், எலும்பு உண்ணும் இயல்பைப் பற்றிக் குறிக்கிறது. இது மதுரை மருதன் இளநாகனாரின் பாடல். பாலைவனத்தில் வாழும் ஒட்டகத்தின் இந்த அறிய இயல்பு மதுரைப் புலவருக்கு எப்படித் தெரிந்திருக்கும்?



கு.உமாதேவி கவிதைகள்

1.

கைகொள்ள முடியாத
அன்பைத் தந்தால்
நானென்ன செய்வேன் என்கிறேன்
நீயோ கைகளை இன்னும்
விசாலமாக்கு என்கிறாய்
இரு கைகளால் எல்லை வகுக்கிறேன்
ஒருமுனை கடல்
மறுமுனை மலை

அலைகளை ஏந்திவந்து
கனவுகளை நிறைக்கிறது உன்கடல்
பிசிர்களைத் தூவிதூவி
பித்தியாக்கிப் போகிறது உன்மலை
இரண்டுக்கும் இடையில் ஓடும்
நதியொன்றை அறிந்தோம் இல்லை

நதியைப் பருகிடாத
அன்பின்சுமை கூடுகிறது
கூடிகூடி அது பெருஞ்சுமையாகிறது
தாளமாட்டாத பளுவை
அப்படியே போட்டுவிட்டு
வெறுமனே
காற்றிலசையும் இலை பார்த்துகொண்டிருக்கிறேன்
என்னோடு சேர்ந்து நீயும் பார்த்துகொண்டிருக்கிறாய்

2.

பயம்கவ்வும்
பாழடைந்த குடிசை நீ
பாசைகள் பல்லிகள் சிலந்திகள்
கொல்லும் விஷப்பாம்புகள்
குடி இருந்ததுப்போக
உனது இல்லறக்கல்லறைக்குள்
புத்தம்புதிய சில உடல்களையும்
இன்று காவுக்கொள்கிறாய்.

3.

வாழ்வின் கணங்கள்
யாவற்றையும்
பரிவிற்கு வழங்கிவிட்டு
கைநிறைய காதலும்
அன்பின்புரிதலும் வேண்டும்
பிச்சைக்காரர்களாகக்
காத்திருப்பதே
இவ்வாழ்வின்
நகைமுரண்.

தமிழர் திருநாள்

பார் விளங்கப் பசியின்றி வாழ
பயிர் விளைத்திடும் கரங்கள் ஓங்க
உழவும் தொழிலும் ஏற்றம் பெற்றிட
தைமகள் தோன்றினாள் நானிலம் போற்றிட

போகியன்று புதுமைகள் புகுத்துவோம்
மாந்தரைப் பற்றியெரிக்கும் மடமைகள் பொசுக்குவோம்
போகியை 'போக்கி' என்பதாய் அல்லாமல்
கன்னல் செழிக்கக் கழனி கொழிக்க
விண் எழுதும் நீர் மடல்
மும்மாரியும் மண் சேர
மண்ணும் மரமும் தழைக்க
பொய்க்காமல் பொழியும் வானமுதத்திற்கு
உவகையுடன் நன்றி செலுத்தும்
நாளாகச் செய்வோம்

பொங்கல் அன்று பட்டாடைகள் பூணுவோம்
உலகம் வாழ
சேற்றில் உழைக்கும் உழவர்தம்
செந்தாமரைக் கழல்கள் போற்றுவோம்
உறுபசி நீக்க உணவினைச் சேர்க்கும்
அவர்தம் வாழ்வுயர வாழ்த்துவோம்
செங்கதிரோன் பொலிகவென்றே
ஆனந்தக் கூத்தாடுவோம்

உழவிற்குத் தோள் கொடுக்கும்
பிற உயிரைப் போற்றுவோம்
மாட்டுப் பொங்கல் அல்ல
யாவருக்குமான மகிழ்ச்சிப் பொங்கலென்றே
தீந்தமிழ்ப் பள்ளு பாடுவோம்

காணும் பொங்கல் அன்று
உணர்வுக்கு உரம் சேர்க்கும்
உறவுகளை மகிழ்விப்போம்
வாழ்விற்கு அர்த்தம் சொல்லும்
வரமவர்கள் நினைவில் வைப்போம்

ஈரடியில் வாழ்வளந்த செந்நாப்போதார்
தமிழுக்குப் புகழ் சேர்த்த பாவலர்
குறளுக்குக் குரல் கொடுத்து
நீள்புகழ் கொள்வோம்
வள்ளுவமே வாழும் வழியென
தெளிந்து வாழ்வோம்
இயற்கையும் உழவனும்
உயர்ந்தால் வளர்ந்தால்
வையமும் சேமமுற
வளமாய் வாழும்

கட்டிக் கரும்பு
தித்திக்கும் வெல்லம்
தெவிட்டாத பால்
நெய் கமழும் முந்திரி
முத்தான புத்தரிசியும் சேர்த்து
பொன் மஞ்சள் கட்டிவைத்த
மண்பானையில் பொங்கலிட்டு
பொங்கலோ பொங்கலென்று
குலவையிட்டு பாடிடுவோம்
அனைத்துயிரும் அன்பாலே
தமிழ் போல வாழ்கவென்றே
மனதார வாழ்த்துகிறோம்.

தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள் !!!

கவிஞர்
இரம்யா ரவீந்திரன்
சார்லட், வட கரோலைனா

அமெரிக்காவில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கானத் திருக்குறள் கட்டுரைப் போட்டி

கடந்த ஆண்டு முதல் அந்நிய சூழலில் வாழும் குழந்தைகள் திருக்குறளை எங்ஙனம் உணர்ந்து கொள்கிறார்கள் என்று அறியும் வகையில், நாடு தழுவிய கட்டுரைப் போட்டி ஒன்றினை வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை, அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம் மற்றும் இலக்கிய ஆய்வுக்கூட்டம் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தி வருகிறது. அவ்வகையில் இவ்வாண்டும் (2022) இங்கு உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக நடந்த திருக்குறள் கட்டுரைப் போட்டியில் அமெரிக்காவின் பல மாநிலங்களிலிருந்து மாணவர்கள் கலந்துகொண்டார்கள். அந்தப் போட்டிக்கு மாணவர்கள் தங்கள் கட்டுரைகளைத் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கேற்ப சில மாணவர்கள் தங்கள் கட்டுரைகளைத் தமிழிலும், சில மாணவர்கள் தங்கள் கட்டுரைகளை ஆங்கிலத்திலும் எழுதி அனுப்பினார்கள்.

முனைவர் கலைச்செழியன் (சென்னை, தமிழ் நாடு), மற்றும் முனைவர் திருமதி சித்ரா மஹேஷ் (டல்லஸ், டெக்சாஸ் அமெரிக்கா) ஆகிய இருவரும் கட்டுரைகள் அனைத்தையும் படித்து மதிப்பெண்கள் வழங்கினார்கள்.

அந்த மதிப்பெண்களின் அடிப்படையில் பன்னிரண்டு கட்டுரைகள் சிறந்த கட்டுரைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அடுத்து, அந்தக் கட்டுரைகளை எழுதிய மாணவ மாணவிகளை, திரு. மணி. மு.மணிவண்ணன் (கலிஃபோர்னியா, அமெரிக்கா), திரு. இளங்கோவன் தங்கவேலு (மிசௌரி,அமெரிக்கா) மற்றும் திரு.கரு.மலர்ச்செல்வன் ஆகிய மூன்று நடுவர்களும் நேர்காணல் செய்தார்கள். அந்த நேர்காணலின் பொழுது, ஒவ்வொரு மாணவனும் (மாணவியும்) தங்கள் கட்டுரையில் உள்ள கருத்துகளை ஐந்து மணித்துளிகளில் சொற்பொழிவாற்றினார்கள். அதன் பின்னர், திருக்குறளைப் பற்றி சில பொதுவான கேள்விகளும் அவர்களின் கட்டுரையைப்

திருமிகு சக்தி செந்தில்

திருமிகு காம்னா சிஸ்ரீ

திருமிகு காவ்யா சிஸ்ரீ

மாணவரின் முதற் பெயர்	மாணவரின் மரபுப் பெயர்	தலைப்பு	மொழி	மாநிலம்	தகுதி	பரிசுத் தொகை
சக்தி	செந்தில்	வள்ளுவரின் பார்வையில் கல்வி	தமிழ்	ஜார்ஜியா	முதல்	$1,000
காம்னா ஸ்ரீ	மோகன் குமார்	திருக்குறளில் வரும் உவமை	தமிழ்	டென்னிசி	இரண்டாவது	$500
காவ்யா ஸ்ரீ	மோகன் குமார்	திருக்குறள் எல்லாச் சமூகங்களுக்கும் எக்காலத்துக்கும் பொதுவானதா?	தமிழ்	டென்னிசி	மூன்றாம்	$250

பற்றி சில பொதுவான கேள்விகளும் கேட்கப்பட்டன. முதற்கட்டத் தேர்வு, சொற்பொழிவு, நேர்காணல் ஆகிய மூன்றிலும் மாணவ மாணவிகள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் பரிசுகளுக்குத் தகுதியான மூன்று கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவை குறித்த செய்திகள் மேலே அட்டவணையில்.

போட்டியில் வெற்றிபெற்ற மூவருக்கும் எங்கள் வாழ்த்துகள். போட்டியில் கலந்துகொண்ட அனைத்து மாணவ மாணவிகளுக்கும் அவர்களை ஊக்குவித்த அவர்களின் பெற்றோர்களுக்கும் எங்களுடைய பாராட்டுக்கள்.

அருவி மலர்க் குழுவிற்காக

செந்தில் முருகன்

ஹரப்பா மொஹெஞ்சதாரோ தொல்பொருள் ஆராய்ச்சியில், முக்கிய பங்கு வகித்த பிரிட்டிசு தொல்பொருள் ஆய்வாளர், எர்னெஸ்ட் மெக்கே, இந்த ஆராய்ச்சியின் போது கிடைத்த ஒரு முத்திரையைப் பற்றி இப்படிக் கூறுகிறார், “ஒரு காளை பல ஆண்களைத் தாக்கி அதனைச் சுற்றி அவர்கள் அனைவரும் தரையில் கிடப்பதாகத் தோன்றுகிறது; ஆண்கள் அந்தக் காளையின் மீது ஏற முயலும் ஒரு விளையாட்டு போன்று ”

சிந்து சமவெளி மக்களிடையேயும் ‘சல்லிக்கட்டு’ பாரம்பரியம் இருந்திருக்குமோ? இல்லை சிந்து சமவெளி மக்கள் தான் தமிழகத்திற்குக் குடிபெயர்ந்து விட்டனரோ?

ஓக்லஹோமா தமிழ்ச் சங்கம்

இவ்வருடம் ஓக்லஹோமா தமிழ்ச் சங்கத்திற்கு மிகுந்த உற்சாகமான ஒன்றாகும். இந்த 2022 ஆண்டில், மொத்தம் ஏழு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. முதலில் மிகச் சிறப்பாகப் பொங்கல் பண்டிகைக் கொண்டாட்டங்கள் காணொளி மூலமாக நடந்தேறியது. அடுத்து வந்த அனைத்து நிகழ்வுகளும் மக்களோடு மக்களாக நேரில் ஒன்று கூடிக் கொண்டாடப்பட்டது. அவை, தமிழ் வருடப்பிறப்பு கொண்டாட்டங்கள், தமிழ் இலக்கிய மன்றம் மற்றும் புத்தகக் கழகம் நிறுவுதல், திருவள்ளுவர் சிலை திறப்பு, மாதாமாதம் காணொளி மூலம் புத்தகக் கலந்துரையாடல், கோடை விளையாட்டுப் போட்டிகள், கோடைச் சுற்றுலா, திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, கடைசியாக தமிழ்க் கூட்டத்துடன் முடிவடைந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக கோவிட் தாக்கத்தால் மக்களை நேரில் திரட்டி நிகழ்வுகளை நடத்த இயலாததால், இவ்வருடம் அனைவரும் மிகுந்த உற்சாகத்துடன் பெருமளவில் நிகழ்வுகளில் பங்கு பெற்றனர். எங்கள் சங்கம் *www.oktamilsangam.com* என்னும் வலைத்தளத்தையும் இந்த ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தியது. நாங்கள் வரவிருக்கும் 2023 ஆம் ஆண்டை மிகச் சிறப்பாகக் கொண்டாட ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

உங்களுக்குத் தெரியுமா? 1330 திருக்குறள்களில் ஒரு இடத்தில் கூட ஒரு கடவுளைப் பற்றியோ அல்லது ஒரு மதத்தைப் பற்றியோ அல்லது ஒரு நாட்டைப் பற்றியோ குறிப்பு கிடையாது.

நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கம்

நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான முதல் நிகழ்ச்சியாக, ஜனவரி 29 ஆம் நாள் - ஒரத்தநாடு முனைவர் கோபு அவர்களின் குழுவினர் மெய் நிகர் வாயிலாகக் கிராமிய இசை விருந்து, நகைச்சுவை நாவலர் திரு. செ.மோகன சுந்தரம் அவர்களின் சிரிப்பு விருந்து, மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மார்ச் 5 ஆம் நாள், உலகத் தாய்மொழி மற்றும் சர்வதேச மகளிர் நாள் விழா ஒருங்கிணைக்கப் பட்டது. இதில் முனைவர் மு.இளங்கோவன் மற்றும் கவிஞர் சல்மா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டார்கள். இந்த ஆண்டின் முதல் நேரடி நிகழ்ச்சியாக மே 8 ஆம் நாள் சித்திரைத் திருவிழா மற்றும் அன்னையர் தின சிறப்பு நிகழ்ச்சிகள் நடந்தேறின. சிறப்பு விருந்தினராக மரபின் மைந்தன் முத்தையா அவர்கள் கலந்துகொள்ள, ப்ளைன்ஸ்போரோ தமிழ்ப் பள்ளி மாணவர்கள் மேடையேற்றிய பொன்னியின் செல்வன் வரலாற்று நாடகம் நடைபெற்றது.

மே 21 அன்று, ஏழாவது ஆண்டாகத் தொடர்ந்து, நியூ ஜெர்சி தமிழ்ச் சங்கமும் NAMI (National Alliance for Mental Illness) -யும் இணைந்து விழிப்புணர்வுப் பேரணி மற்றும் நடைப் பயணம் நடத்தியது.

கோடைக் கால சிறப்பு நிகழ்ச்சியாக ஜூலை மாதம் 9 அன்று திரு. பாலச்சந்திரன் IAS, திரு.

கார்த்திகை செல்வன், கவிஞர் குட்டி ரேவதி அவர்களின் சிறப்புரை, கலந்துரையாடல் மற்றும் எழுத்தாளர், நாடகக் கலைஞர், திருநங்கை A.ரேவதி அவர்கள் வழங்கும் ஓரங்க நாடகம் நடைபெற்றது.

இவ்வாண்டின் நிறைவு நிகழ்ச்சியாகத் தீபாவளி சரவெடி கொண்டாட்டம் அக்டோபர் 30 ஆம் நாள் வெற்றிகரமான நேரடி நிகழ்ச்சியாக நடந்தது. இந்நிகழ்ச்சியில் ஆடல் - பாடல், அறுசுவையில் கிறங்கடித்த அருமையான வாழை இலை விருந்து, சிறந்த தம்பதிகளுக்கான போட்டி - திருவாளர் - திருமதி நியூ ஜெர்சி, விஜய் டிவி சூப்பர் சிங்கர் - பாடகர்களின் இன்னிசை நிகழ்ச்சி எனப் பல்சுவை நிகழ்ச்சிகள், ஒன்றை விஞ்சி ஒன்றாய் அனைவரின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு, மகிழ்ச்சியில் ததும்பச் செய்தது.

ஹாரிஸ்பர்க் வட்டாரத் தமிழ்ச் சங்கம்

இரண்டு வருட இடைவெளிக்குப்பின், ஹாரிஸ்பர்க் வட்டாரத் தமிழ்ச் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்கள் " தோன்றிற் புகழோடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, 'ஹாரிஸ்பர்க் 'வட்டாரத் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழா ஆண்டை (2022) மிகச் சிறப்பாகக் கொண்டாடினர். வசந்த காலம், கோடை காலம், இலையுதிர் காலம், எனப் பிரித்து, முறையே தமிழ்ப் புத்தாண்டு, கோடைச்சுற்றுலா, பொன் விழா ஆண்டு நிகழ்ச்சிகளை நடத்தி ஹாரிஸ்பர்க் வாழ் தமிழர்களை மகிழ்வித்தனர்.

மே 21, தமிழ்ப் புத்தாண்டு நிகழ்ச்சியாகச் சிறார்களுக்குத் திருக்குறள் போட்டி, பெரியவர்களுக்கு அவர்களின் தமிழறிவைச் சோதிக்கும் வண்ணம் எழுத்தாக்கம் (Spelling) ஆகிய போட்டிகளை நடத்தி சிறார்கள் மற்றும் பெரியவர்களின் எழுத்துத் திறனை மேம்படுத்தினர். பரத நாட்டியம், பறை இசை , குழந்தைகள் நடனம் ஆகியவற்றிற்குப் பின் எல்லோரும் வெகுவாக எதிர்பார்த்திருந்த வாழை இலையில் விருந்துணவு ; விநியோகச் சங்கிலியில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக, வாழை இலைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. அந்தக் குறையை உணவு மேற்பார்வை குழுவின் மிகச் சிறந்த விருந்தோம்பலின் காரணமாக, வந்திருந்த எவரும் பொருட்படுத்தவில்லை.

செப் 10 - லீவிஸ்பெர்ரி நகரில் உள்ள மிக அழகான ஏரிக் கரையில் கோடைச் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்திருந்தனர். வீட்டிற்கொரு பதார்த்த மாகச் சங்க உறுப்பினர்கள் கொண்டு வந்த உணவு வகைகளுடன், உணவு மேற்பார்வை குழுவினர், ஏரிக் கரையில் அன்று சமைத்தளித்த உணவும், ஏரியின் ரம்மியத்தில் மனத்தைப் பறிகொடுத்தவர் களின் வயிற்றை நிறைத்து மகிழ்வித்தன. காலம் மாறி போச்சென, பெண்கள் கைப்பந்து விளையாட, ஆண்கள் மியூசிக்கல் சேரில் ஓடி விளையாடக் குதூகலத்திற்குக் குறைவே இல்லாமல் போயிற்று.

Oct 29 - திரு. கணேஷ் குமார் பொன்னையன் தலைமையில், HATS நிர்வாகக் குழு உறுப்பினர்கள், தீபாவளி சிறப்பு நிகழ்ச்சியும் , பொன் விழா ஆண்டுக் கொண்டாட்டங்களையும் , ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் என்ற முறையில் கொண்டாடி அசத்தி விட்டனர். சிறப்பு விருந்தினராக FeTNA வின் தலைவர், முனைவர். பாலா சுவாமிநாதன், சபையோரின் குறிப்பறிந்து, குறுகிய நேரத்தில் சிறப்பான சொற்பொழிவொன்றை ஆற்றினார். அவர், பாரதியார், பாரதிதாசன் கவிதைகளை மேற்கோள் காட்டி, HATS உறுப்பினர்களுக்கு அறிவுரை வழங்கி HATS-இன் 50வது விழாவின் சிறப்பைப் பாராட்டிப் பேசினார்,

குழந்தைகள் நிகழ்ச்சிகள் எல்லாம் சிறப்பாக முடிவுற, எல்லோரும் வெகுவாக எதிர் பார்த்துக் கொண்டிருந்த 'விஜய் டிவி சூப்பர் சிங்கர்' பங்கேற்ற பாடகர்களின் திரை இன்னிசை நிகழ்ச்சி ஆரம்பமானது. நிகழ்ச்சியை, சாமியிலிருந்து தொடங்கி ஆசாமியில் முடித்தார்கள். (பழம் நீயப்பாவிலிருந்து ஆரம்பித்து, அய்யா சாமியில் முடிந்தது) கடைசிப் பாடல் ஒரு கதம்பம்! பல குத்துப்பாடல்களில் இருந்து ஓரிரு வரிகள். சிறார்களுடன், பெரியவர் களும் சேர்ந்து கொள்ள அரங்கமே திமிலோகப் பட்டது என்றால் மிகையாகாது. இந்த முப்பெரும் நிகழ்ச்சிகள் அல்லாமல், தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு, டென்னிஸ் போட்டி, உயில் , செல்வம் முதலீடு ஆகியவைகளைப் பற்றி வகுப்புகள் எடுத் தனர். மேலும், குழந்தைகள் உதவியோடு , நெடுஞ்சாலை பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டனர்.

அமெரிக்க வாழ்வியலில் இணைந்த பின்னும் ஹாரிஸ்பர்க் தமிழர்கள் தங்கள் தனித்துவத்தை இழக்காமல் ஒற்றுமையாகத் தமிழ்க் கலாச்சாரத்தைப் பேணி வருவதைப் பார்க்கும்போது 'தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு ' என நாமக்கல் கவிஞரின் கவிதை வரிகள்தாம் நினைவுக்கு வருகின்றன. ஒருவேளை நாமக்கல்லார் முற்பிறவியில் ஹாரிஸ்பர்க்கில் வாழ்ந்த தமிழராய் இருப்பாரோ? என்று எண்ணவும் தோன்றுகிறது!!

சாக்ரமெண்டோ தமிழ் மன்றம்

சாக்ரமெண்டோ தமிழ் மன்றம் 1997 ஆம் ஆண்டு தொடங்கி இன்று வரை 25 ஆண்டுகளாகத் தமிழ் மொழியின் கலை, இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தின் சிறப்பை இன்றைய தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் சீரிய பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறது. மேலும் சாக்ரமெண்டோ வாழ் தமிழ்ச் சொந்தங்களை இணைக்கும் பாலமாகவும் விளங்குகிறது. ஆண்டுதோறும் பொறுப்பேற்கும் இயக்குநர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவரும், ஒவ்வோர் ஆண்டும் அயராது பாடுபட்டு, தமிழ் மன்றத்தின் வளர்ச்சிக்குப் படிகள் அமைத்ததன் விளைவு, இன்று சிறப்பான வளர்ச்சியை நம் தமிழ் மன்றம் பெற்று இருக்கிறோம்.

வெள்ளிவிழா ஆண்டில் பயணிக்கும் சாக்ரமெண்டோ தமிழ் மன்றம் தொடர்ந்து தனித்துவமான பல்வேறு நிகழ்வுகளை இவ்வாண்டு செயல்படுத்தி இருக்கிறோம். இதில் ஒரு சில நிகழ்வுகளை இங்கே பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.

கோடைக் கால பயிற்சிப் பட்டறை

மன்றம் இந்த ஆண்டு புதிய முயற்சியாக இளைஞர்களின் பேச்சாற்றல், தலைமைப் பண்பு மற்றும் இசை போன்ற தனித்திறன்களை மேம்படுத்திடப் பயிற்சிப் பட்டறை ஒன்றைக் கோடை காலத்தில் ஒரு மாத காலம் நடத்தியது. இந்த முயற்சிக்குக் கிடைத்த சிறப்பான வரவேற்பைத் தொடர்ந்து இனி வரும் ஆண்டுகளிலும் இந்த முயற்சியை தொடர்ந்திட உள்ளது.

இளைஞர் மன்றம்

இளம் தலைமுறையினரின் தனித்துவ

“மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.

என்கிறார் திருவள்ளுவர். (குறள் 969)

இந்தக் குறளில் கவரிமா என்று வள்ளுவர் குறிப்பிடுவது மான் அல்ல; இமைய மலையில் வாழும் மாடு வகையைச் சேர்ந்த விலங்கு (‘ஹிமாலயன் யாக்’). புறநானூற்றுப் பாடல் 132 மற்றும் பதிற்றுப்பத்துப் பாடல் 43 ஆகிய இரண்டிலும் நரந்தைப் புல் உண்ணும் இந்தக் கவரிமாவைப் பற்றிக் குறிப்பு உள்ளது.

ஆற்றல்களை மேம்படுத்திடவும் மற்றும் தமிழ்ச் சங்கப் பணிகளில் அவர்களின் பங்களிப்பை அதிகப்படுத்திடவும் இவ்வாண்டு முதல் பதினான்கு இளையோருடன் இளைஞர் மன்றம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

தமிழ்ப் பள்ளிகளுடன் கூட்டுக் குழு

சாக்ரமெண்டோ பகுதியில் உள்ள நான்கு தமிழ்ப் பள்ளிகளுடன் இணைந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கி அதன் மூலம் திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளைப் பொங்கல் விழாவோடு சேர்த்து நடத்தி வருகிறது.

பைந்தமிழ் வாசகர் வட்டம்

இலக்கிய ஆர்வத்தை ஊக்குவிக்கும் விதத்தில் இவ்வாண்டு முதல் பைந்தமிழ் வாசகர் வட்டம் என்ற அமைப்பை உருவாக்கி தமிழறிஞர்களுடன் உரையாடல், சிறுகதைகளுக்கானக் கலந்துரையாடல் மற்றும் இலக்கிய விழாக்கள் ஆகியவற்றை நடத்தி வருகிறது.

பூங்கனி மின் இதழ்

சாக்ரமெண்டோ பகுதி வாழ் தமிழ் மக்களின் தனித்திறனை ஊக்கப்படுத்துவதற்காக இவ்வாண்டு முதல் சாக்ரமெண்டோ தமிழ் மன்றத்தால் "பூங்கனி" என்ற மின் இதழ் தொடங்கப்படுகிறது. இவ்விதழ் பொங்கல் திருநாள் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு விழா இதழ் என்று வருடத்திற்கு இரண்டு முறை இணையத்தில் வெளியிடப்படும். இவ்விதழில் கவிதை, ஓவியம், இசை, சிறுகதை, சமையல் குறிப்பு, இசை, மகளிர் பக்கம், விளையாட்டு, கல்வி மற்றும் தமிழ் மொழி சார்ந்த கட்டுரைகள் என்று உங்களின் பல்வேறு திறன்களைக் கொண்டதாக இருக்கும்.

தமிழ் மரபுத் திங்கள்

சாக்ரமெண்டோ தமிழ் மன்றத்தின் வேண்டுகோளுக்கு இணங்கியும் தமிழ் மொழியின் பெருமையையும், சாக்ரமெண்டோ வாழ் தமிழ் மக்கள் ஆற்றியுள்ள பணிகளையும் பாராட்டி 2022 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தை, தைப் பொங்கலாகத் தமிழர்கள் கொண்டாடுவதை, சாக்ரமெண்டோ பகுதியைச் சார்ந்த மேயர்களான திரு.போல்சம், திரு. ரோஸ்வில், திரு.ராஞ்சோ கோர்டோவா மற்றும் திரு ராக்லின் ஆகிய நால்வரும் “தமிழ் மரபுத் திங்கள் (தமிழ்ப் பண்பாட்டு மாதமாக)” அறிவிப்பு செய்து தமிழுக்கும், இப்பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கும் சிறப்புச் செய்துள்ளனர்.

வெள்ளி விழா கொண்டாட்டம்

பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு விழா இவ்வாண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கடந்த மே மாதம், 25 ஆண்டுக்கால மன்றத்தின் தூணாக இருந்த இயக்குநர்களின் தன்னார்வ சேவையைப் பாராட்டி விழா எடுக்கப்பட்டது. மேலும் வெள்ளி விழா ஆண்டில் வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 36வது பேரவை விழா சூன் 30 மற்றும் சூலை 1,2 2023 ஆகிய திகதிகளில் சாக்ரமெண்டோவில் நடைபெற இருப்பது மேலும் சிறப்பாகும். பேரவை விழாவில் வட அமெரிக்கத் தமிழ்ச் சொந்தங்களை வரவேற்க ஆவலோடு காத்திருக்கிறோம். உங்கள் வருகையால் சாக்ரமெண்டோ மண்ணில் தமிழ் மணக்க செய்திடுங்கள்.

தமிழால் இணைவோம். தமிழைத் தரணி போற்றிட செய்திடுவோம்.

திரு நெல்லை கண்ணன்

அருவி போன்ற மிகச் சிறந்த தமிழ்ப் பேச்சுக்கு உரியவர், பட்டிமன்றங்களின் தலைவர், தமிழ்க்கடல் என்று அனைவராலும் போற்றப்பட்டவர், தமிழ் மற்றும் சமூகப் பணிகளை இரு கண்களாக எண்ணிச் செய்தவர்.

போர்ட்லண்ட் மாநகர தமிழ் மன்றம்

ஒரேகான் மாநிலத்தின், போர்ட்லண்ட் மாநகர தமிழ் மன்றம், இந்த ஆண்டு தன் 20ஆவது அகவையில் அடியெடுத்து வைக்கிறது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் கூற விரும்புகிறோம்.

2022ஆம் ஆண்டை வலையொளி மூலம் பொங்கல் நிகழ்வோடு தொடங்கினோம். இதில் தமிழ் வினாடி வினா போட்டி, கவிதைப் போட்டி, குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் நாட்டுப்புற நடனம் ஆகியவை இடம்பெற்றது. மார்ச் மாதம் “தமிழ்த் தேனி” போட்டி நடத்தப்பட்டது. இதில் குழந்தைகள் பெரும் எண்ணிக்கையில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

தமிழ் வருடப் பிறப்பை வலையொளி வழியே சிறப்பாகக் கொண்டாடினோம், இதில் தமிழ்த் தேனீயில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கியதுடன், ஈரோடு மகேஷ் - அசார் - டி.எஸ்.கே பங்கேற்ற காணொலி நகைச்சுவை நிகழ்ச்சியும், திறமையான உள்ளூர் பாடகர்களின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

கோடை விடுமுறையில் இருந்து நேரிடை நிகழ்ச்சிகளை நடத்துகிறோம். கோடைக்கால நிகழ்வுகள், ஜூலை மாதம் மூன்று மைல் தொலைவான மலையேற்றத்துடன் தொடங்கியது, இதில் 6 மாத குழந்தை முதல், பெரியவர்கள் வரை அனைவரும் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். ஆகத்து மாதம் வேனில் விழா கொண்டாடப்பட்டது. 300க்கும் அதிகமானோர் கலந்துகொண்ட இவ்விழாவிற்கு வந்தவர்களிடம் ஜூம்பா, திருவிழா போட்டிகள், பஞ்சு மிட்டாய், சுடசுட ஆப்பம் போன்றவற்றிற்கு ஏகோபித்த வரவேற்பு கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

ஜிபிடிஎம் இன் மிகப்பெரிய நிகழ்வான தீபாவளி மகா கொண்டாட்டம், நவம்பர் மாதம் *Skyview High School* உள் அரங்கில் 1000க்கும் அதிகமானோர் கலந்து கொண்டு மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. இதில் பல குழுவினர் பங்கெடுத்த நடனப் போட்டியில் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். நடனப் பள்ளி மாணவர்களின் பரதநாட்டியமும் இடம்பெற்றன. பரதநாட்டியம் - பறை - டைகோ டிரமின் சங்கமம் மெய்சிலிர்க்க வைத்தது. அடுத்து வந்த பறை இசைக் கலைஞர்களின் இசை அனைவரையும் ஆட வைத்தது. சுவையான தென்னிந்திய இரவு விருந்து பரிமாறப்பட்ட, பிறகு பிரபல பின்னணி பாடகர் திரு. ஹரிஷ் ராகவேந்திரா சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் நடுவராகக் கலந்து கொண்டு வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுத்ததுடன், சியாட்டில் - ரிதம் ஸ்டுடியோ இசைக் குழுவுடன் இணைந்து அனைவரையும் மகிழ்வித்தார்.

சிந்து சமவெளி நாகரீகத்தின் அகழ்வாராய்ச்சித் தலங்களான ஹரப்பா மற்றும் மொஹெஞ்சோதாரோவில் கிடைத்த ஆறு முகம் கொண்ட டெரகோட்டா பகடையைப் போன்றே கீழடி அகழ்வாராய்ச்சியிலும் கிடைத்திருக்கிறது.

என்ன செய்துவிடும் இந்த உலகம்?

கவிஞர்
த.ச.பிரதிபா பிரேம்
அட்லாண்டா, GA

மிஞ்சிப்போனால்....

நம்மைப் பற்றி நான்கு பேர்
நாவலிக்கப் பேசுவார்களா?
பேசட்டுமே!

நம்மைக் கண்டு நமட்டு சிரிப்பை
உதிர்ப்பார்களா?
உதிர்க்கட்டுமே!

நாம் எப்படி எல்லாம்
நடந்திருக்க வேண்டும்
என்று அவர்கள் தேவையில்லாமல்
கவலை கொள்வார்களா?
கொள்ளட்டுமே!

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, கற்பு
கண்ணியம், கட்டுப்பாடு
ஆகியவற்றால் உன்னைச்
சுட்டுப் பொசுக்க வருகிறார்களா?

நெருப்பாய் மாறு
நெருஞ்சியாய் மாறு
வெள்ளமாய் மாறு
புயலாய் புறப்படு
பூகம்பமாய் பிளந்து காட்டு

ஐயை நீ, ஐம்பூதங்களின்
ஐக்கியம் நீ,
அஞ்சாமல் உலகை எதிர்கொள்
அச்சம் வந்தால் ஆராய்ந்து பார்
அழாதே!

உனக்கு
அண்ட இடமா இல்லை?
ஆயிரம் கதிரவன் விளக்கெரிக்க
அகிலமே உனக்கிருக்கு

வாழ்வை முடித்துக் கொள்ள
வழி ஆயிரம் உண்டு
வாழ்ந்து நீ காட்ட நம்பிக்கை
மட்டுமே உண்டு

இனி வாழவே முடியாது
என்றெண்ணும் பொழுதெல்லாம்
எண்ணிக் கொள்!

என்ன செய்து விடும்
இந்த உலகம் நம்மை?????

தவறு செய்தாயா? திருத்திக்
கொள்ளலாம்
உன்னைத் தவறு செய்ய
செய்து விட்டார்களா?
போராடி விலகி விடலாம்!

மண்ணின் ஆழத்தில்
வீழ்ந்தாலும் துழாவிப் பார்
உனக்காக ஏதோ ஒரு வேர்
அங்கே இருக்கும்,
பற்றிக்கொண்டு
வெளிச்சத்திற்கு வா!

இப்படியாக நீ
வாழ்ந்து காட்டிவிட்டு
சொல்
என்ன செய்ய முடிந்தது
இந்த உலகத்தால் என்று!!

அலபாமா தமிழ்ச் சங்கம்

தைப்பொங்கல் மிக விமரிசையாக கொண்டாடப்பட்டது. மேயர் ஹூவர் தலைமை விருந்தினராக வந்திருந்தார். இவ்விழாவில் பொங்கலின் சிறப்பு, தமிழ்க் கலாச்சாரம், மொழி, தென்னிந்திய உணவு, பாரம்பரியம் போன்றவை முன்னிலைப் படுத்தப்பட்டன.

பெண் உறுப்பினர்கள் அனைவரும் மகளிர் தினத்தைக் கொண்டாடினார்கள். அவ்விழாவில் ஆரோக்கியம், உடற்பயிற்சி, தொழில் உள்ளிட்ட பல தலைப்புகள் விவாதிக்கப்பட்டன. மேலும் தொழிற்பண்பட்டவர்களும் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்தார்கள். முதன் முறையாக விளையாடுவதை ஊக்கப்படுத்தவும், தென்-ஆசிய விளையாட்டுகளை விளையாட நம் சங்கத்தினருக்கு வாய்ப்பு ஏற்படுத்தவும், கைப்பந்து, பூப்பந்து, டேபிள் டென்னிஸ் மற்றும் கேரம் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

மே மாதத்தில் வசந்த விழா கொண்டாடப்பட்டது. அவ்விழாவில் சங்க உறுப்பினர்கள் பலவிதமான உணவுகளை விற்பனையாளர்களிடம் பெற்று சுவைத்து மகிழ்ந்தார்கள். குழந்தைகளுக்கும் பெரியோருக்கும் விளையாட்டு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

முதன் முறையாக கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது. இதில் 14 அணிகள் பங்கேற்றன. இந்நிகழ்ச்சியின் மற்றொரு முக்கிய அம்சமாக, முதன் முறையாக அலபாமாவில் பெண்களுக்கென கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டது.

கிரிக்கெட் போட்டியை ஒட்டி மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் நிதி திரட்டுதல் நடத்தப்பட்டது. அதன் மூலம் $1200 நிதி திரட்டப்பட்டு, எங்கள் சங்கத்தின் சார்பாக அமெரிக்கன் கேன்சர் சொசைட்டிக்கு வழங்கப்பட்டது.

அலபாமா தமிழ்ப் பள்ளியின் ஆண்டு விழா கலை நிகழ்ச்சிகளுடன் விமரிசையாக கொண்டாடப்பட்டது. திரு. நெப்போலியன் துரைசாமி அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார்.

அக்டோபர் மாதம் ‘முத்தமிழ் மாலை’ கலை விழா மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதில் பல வகையான கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. மெம்பிஸ் பறை குழுவின் ‘தமிழர் கலை - பறை’ இந்நிகழ்ச்சியின் ஒரு முக்கியமான அம்சமாக இருந்தது.

புதிய உறுப்பினர்கள் மற்ற உறுப்பினர்களை சந்திப்பதற்கு வாய்ப்பு அளிக்கவும், உடற்பயிற்சியை ஊக்குவிப்பதற்கும் மாதம் ஒரு நடைபயணம் அல்லது மலையேற்றம் ஏற்பாடு செய்யப்படுகிறது.

வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams of North America (FeTNA)
A Registered - Non Profit, Tax exempet 501 (c) (3) Organization
பேரவையின் அன்புடை நெஞ்சம் இணையச்சேவை
https://fetna-anbudainenjam.org
பேரவையின் அன்புடை நெஞ்சம்
FeTNA Loving Hearts
https://fetna-anbudainenjam.org/
அமெரிக்கா மற்றும் கனடா வாழ் தமிழர், தங்கள் இளையோருக்கு
உற்ற துணையைத் தேடும் முயற்சிக்கு உதவிடப் பேரவையின் முன்னெடுப்பு!
தமிழ்க் குடும்பங்களுக்கு அரியதொரு வாய்ப்பு!!
FeTNA Loving Hearts is a service offered by FeTNA to help Tamil Families and Tamil Youth living in the USA and CANADA to find their matching life partners.
Register for FREE to view Profiles
மின்னஞ்சல் தொடர்புக்கு: anbudainenjam@fetna.org

அரிசோனா தமிழ்ச் சங்கம்

அரிசோனா தமிழ்ச் சங்கம் ஆரம்பித்து 30 ஆண்டுகளை கடந்து வெற்றி நடை போடுகிறது. இந்த வருடம் 2022 நவம்பர் மாதம் 13ம் தேதி முத்து விழாவை முன்னிட்டு "சிறப்பு சரவெடி விழா" மிக மகிழ்வாகக் கொண்டாடப் பட்டது. தமிழ்ச்சங்க பொறுப்பாளர்களும், தமிழ்ப்பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் மற்றும் தன்னார்வலர்களும் இணைந்து விழாவைச் சிறப்பாக நடத்தினோம்.

இந்த வருடம் 2022 ஏப்ரல் மாதம் 24ம் தேதி "உறியடி விழா" மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று இயல், இசை, நாடகம், பட்டிமன்றம், மாறுவேடப் போட்டி, வினாடி வினா, புகைப்படப் போட்டி, ஓவியம், கோலம் என்று பல நிகழ்ச்சிகள் விழாக்களில் இடம் பெற்றன. இதில் மாண்வர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அரிசோனா தமிழ்ப் பள்ளியானது அரிசோனா தமிழ்ச் சங்கத்தின் ஓர் அங்கம். இந்த வருடம் "படிக விழா" என்று 15 வது பட்டம் அளிப்பு விழாவைச் சிறப்பாக நடத்தி இளம் பட்டத்தாரிகளைப் பெருமையுறச் செய்தோம். மேலும் ஒவ்வொரு ஆண்டும் பட்டம் பெற்று செல்லும் மாணவ, மாணவிகள் ஆர்வமாகப் பள்ளியில் ஆசிரியர் பணியை மேற்கொள்கிறார்கள். அது மிகவும் சிறப்பு.

தமிழ்ப் பள்ளி ஆரம்பித்து 15 வருடம் ஆகி இருக்கிறது, 60 மாணவர்களுடன் தொடங்கிய பள்ளி இப்போது 550 மேற்பட்ட மாணவர்கள் தமிழ் கற்கும் பள்ளியாக வளர்ந்து இருக்கிறது. தமிழ் கற்கும் ஆவல் உள்ள குழந்தைகளும், தங்கள் குழந்தைகள் தமிழ் கற்க வேண்டும் என்ற ஆவல் உள்ள பெற்றோர்களும் இணைந்து செயல்படுவதுதான் இந்த வளர்ச்சிக்குக் காரணம்.

பாலைப்பூ என்ற இதழ் மூலம் ஆண்டுதோறும் மாணவர்களின் கவிதை, கட்டுரைகள், ஓவியங்கள் முதலியவற்றை வெளியிட்டு தமிழ் கற்கும் ஆவலை மேலும் ஊக்கப்படுத்துகிறோம். வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை நடத்தும் தமிழ்த் தேனீ போட்டியில் நம்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து பங்கு பெறுகிறார்கள். 2021ம் ஆண்டு தேசிய அளவில் நடந்த தமிழ் கூறும் தலைமுறை பேச்சுப் போட்டியில் நம் பள்ளியிலிருந்து நான்கு மாணவர்கள் பங்கு பெற்றது பெருமை.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

ஹூஸ்டன் தமிழ்ச் சங்கம்

ஹூஸ்டன் தமிழ்ச் சங்கத்தில் கடந்த சனவரி மாதம் ‘திருக்குறள் திருவிழா’ நிகழ்வு நடைபெற்றது. அவ்விழாவில், மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டு திருக்குறளைப் பாங்குற ஒப்புவித்தார்கள்.

பெருந்தொற்று நோயினால், பொங்கல் விழாவானது இணைய வழியில் நடைபெற்றது. அவ்விழாவில் நடைபெற்ற இன்னிசை நிகழ்வானது கண்ட அனைவரையும் பேருவகையாக்கியது எனில் அது மிகையாகாது.

மேலும், 2022 ஆம் ஆண்டின் திசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள பெரியவர்களுக்கான ‘திருக்குறள் திருவிளையாடல்’ என்ற நிகழ்வானது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இவ்வாண்டு பட்டிமன்றம், சொற்பொழிவுகள், இலக்கியக் கூட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் சிறப்பாக நடந்தேறியது.

மாணவர்களுக்குப் பள்ளியில், தமிழ்ப்பாடத்திற்கான மதிப்பீடு பெறும்வகையில், பாடத்திட்ட மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டன.வழமை போலவே, ஆசிரியர் கலந்தாய்வுக் கூட்டங்களும், பயிற்சிப் பட்டறையும் சிறப்பாக நடந்தது. பூங்காவில் சிற்றுலாவும் அதையொட்டி விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

பேரவைச் செய்திகளை ஹூஸ்டன் தமிழ்ச்சொந்தங்களிடம் கொண்டு சேர்ப்பதில் முனைப்போடு செயல்படுவதும் தொடர்கிறது. ‘தமிழால் இணைவோம்’ என்ற கோட்பாட்டோடு சங்கப் பணிகளும் நிகழ்ச்சிகளும் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றன. சங்கத்தில் இளம் தலைமுறைகளிடம் முனைப்பும் ஆர்வமும் முன்னோக்கிப் பயணிக்கின்றன.

அம்மட்டோ! எதிர்வரும் சனவரி மாதத்தில் பொங்கல் விழாவினை, வாழையிலை விருந்துடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளோம்.

சிந்து சமவெளி நாகரீகத்துக்கும் மற்றும் திராவிட நாகரீகத்துக்கும் பொதுவான பெரும்பான்மையான மண்பாண்ட வகை எவை?

அ . கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் , ஆ . வர்ணம் பூசப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்கள், இ. காவி நிற மட்பாண்டங்கள், ஈ .சிவப்பு மட்பாண்டங்கள்

[illegible]

அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழகம்

2021 ஆண்டின் அமெரிக்கத் தமிழ்க் கல்விக்கழக ஆண்டு விழா மிகச் சிறப்பாக மெய்நிகர் விழாவாக நிகழ்ந்தேறியது. தமிழறிஞர்கள் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்று விழாவினைச் சிறப்பித்தனர். ஆண்டு விழாவில் மாணாக்கர்கள் தம் பல்வேறு திறன்களை கலை நிகழ்ச்சிகள் வாயிலாக வெளிப்படுத்தினர். விழாவினை ஒட்டி ஆண்டு விழா மலர் வெளியிடப்பட்டது. 2022 ஆண்டிற்கானப் புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப் பட்டது.

FeTNA மற்றும் ATA இணைந்து நிகழ்த்திய புத்தகத் திறனாய்வில் திருமிகு பாலகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் எழுதிய Journey Of Civilization என்ற நூல் திறனாய்வு செய்யப்பட்டது. அந்நிகழ்வில் பங்காற்றிய மாணாக்கர்களுக்குச் சான்றிதழ் சூலையில் நியூயார்க் மாநகரில் நிகழ்ந்த FeTNA விழாவில் வழங்கப்பட்டது.

சூலை மாத இறுதியில் இரண்டு நாட்களுக்கு ஒரு பயிற்சிப் பட்டறை வாசிங்டன் டி.சி.யில் நிர்வாகக் குழுவினருக்கு அளிக்கப்பட்டது அதில். Maryland Non-Profit Organization அவர்களால் Board Of Excellence என்ற ஒரு பயிற்சியும் அதன் பின்னர் அ.த.க.வின் அடுத்த கட்ட எதிர்கால தொலை நோக்குப் பயணத் திட்டங்கள் குறித்துத் திட்டமிடப்பட்டது. தற்பொழுது இருக்கும் அ.த.கவின் பாடநூல்களை அமெரிக்க மண்ணில் பிறந்து வளரும் குழந்தைகளுக்கு உகந்தவாறு, இன்னும் எங்ஙனம் பாடத் திட்டங்களை திறம்பட வடிவமைப்பது என அலசி ஆராயப்பட்டது.

உலகின் வெவ்வேறு நாடுகளில் செயல்படும் கல்வி முறைகள் குறித்து ஆராயப்பட்டது. இதில் பாடத்திட்டங்கள் வடிவமைத்த ஆசிரியர் குழுவினரும் கலந்துரையாடினர். அ.த.க.விற்கெனத் தனி அடையாளங்கள்(branding) வடிவமைப்பது, அ.த.க.வின் புத்தகங்களைத் தனித் தன்மையுடன் அறிவியல் பூர்வமாக வடிவமைப்பது, அ.த.க.வின் மென்பொருள் மேம்படுத்துவது, போன்றவைகள் குறித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்யப்பட்டது. அடுத்த பத்தாண்டுகளுக்கான எதிர்கால இலக்குகளைக் கண்டடைந்தது சிறப்பாக அமைந்தது.

இந்த ஆண்டும் வழமையாக நிகழும் ஆசிரியர்களுக்கானப் பயிற்சிப் பட்டறையும் சிறப்பாக நிகழ்ந்தது. பல மாநிலங்களிலிருந்து ஆசிரியர்கள் பங்கேற்று பயனடைந்தனர். அ.த.க.வின் பள்ளிகளுக்கு Tamil Language Seal of Biliteracy & Foreign Language Credit பயிற்சி அளிக்கப்பட்டது. பள்ளிகள் ஆர்வமாகப் பங்கேற்று பல ஐயங்களை வினவி, விடை கண்டடைந்து நடைமுறைப்படுத்தும் விதமாகப் பயிற்சி அமைந்தது மிகச் சிறப்பு.

கடந்த அக்டோபர் மாதத்தில் Dr. Donald Davis, Director of South Asian Studies, University Of Texas, Austin அவர்களின் தலைமையில் ACTFL என்ற அமைப்பிலிருந்து திருமிகு Paul Sandrock அவர்களால் அ.த.க.வின் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கண் எதிரே கண்ணாடி!

ஒளி தின்னும் இருளுக்குள்
ஓடோடி வந்திடுவாய்- மகளே!

பதார்த்தங்கள் பல உண்டு-பையிலே
பகிர்ந்துண்டு பசியாறு பாப்பா!

புத்தகம் வாங்க கேட்ட பணமிருக்கு-உள்ளே
மறவாமல் வாங்கி வா மகளே!

நிலம் நனைய மழை வரப் போகுது-நீ
நனையாமல் வந்து விடு ராசாத்தி!

“போம்மா"- ஒற்றை வார்த்தையில் பதில்!

நிலைப்படி தாண்டி வருவதற்குள் வந்து நின்றது
வாசலில் பள்ளிப் பேருந்து!

பதின்பருவ தோழிகளுடன் வளவளவென்று
தலையை ஆட்டி ஆட்டி பேசியபடியே
செல்ல மகள் அவசரமாகத் திரும்பி
பேருந்து கண்ணாடி வழியே
கையாட்டி விட்டுப் போக,

உச்சி குளிர்ந்து புன்னகைத்தாள் அம்மா!

இதோ இன்று கண் எதிரே கண்ணாடி!
நிலைக்கண்ணாடியில் நின்றவாறு
நோக்கின்- தன்னுருவாய் மகள்!

புகைப்படத்தின் மங்கலான கண்ணாடி வழியே அம்மா...

ஓர் வித்தியாசம் அன்று தமிழில்-இன்று
அத்தனையும் ஆங்கிலத்தில்!

“உனதாய் நானும்
எனதாய் அவளும்”
என
சுழன்று கொண்டிருக்கிறது
பூமியோடு சேர்ந்து
நம் வாழ்க்கை பந்தும்!!!

ஷீலா ரமணன்
சான் அண்டோனியோ டெக்சாஸ்

சின்சினாட்டி மாநகர் தமிழ்ச் சங்கம்

சின்சினாட்டி மாநகர் தமிழ்ச் சங்க பொங்கல் விழா, மெய்நிகர் விழாவாக "கோலிவுட் கலாட்டா" வலையொளியில் நேரலையாக, சுமார் 25 பேர் பங்கேற்ற நிகழ்ச்சியாக நடைபெற்றது. கோவிட் - 19 பெரும் தொற்றுக் காரணமாக இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகள் அனைத்தும் வலையொளியில் நடந்து வந்ததை முற்றுக்கு கொண்டு வரும் வகையில் தமிழ்ச் சங்க உறுப்பினர்களிடம் கருத்து கேட்கப்பட்டு, வரவேற்பின் அடிப்படையில் சித்திரைக் கொண்டாட்டம் ஓர் உள்ளரங்கு விழாவாக ஏப்ரல் 16, 2022 பிற்பகல் 2.00 மணி முதல் இரவு 8:00 மணி வரை கொண்டாடப்பட்டது. 400 பேர் கலந்து கொண்ட 'சித்திரை கொண்டாட்டம்-2022' பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடனும், இரவு விருந்துடனும் இனிதே முடிவுற்றது.

கடந்த மூன்று ஆண்டுகளாகச் சிறப்புற தமிழ்ச் சங்கத்தை நடத்திச் சென்ற நிர்வாகக் குழு பணி நிறைவு பெற்று, இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தமிழ் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழு பொறுப்பேற்றது. சின்சினாட்டி மாநகர் தமிழ்ச் சங்க தமிழ்ப் பள்ளியின் 2021-22 கல்வியாண்டினை வெற்றிகரமாக நிறைவு செய்து மே மாதம் 21 ஆம் தேதி சனிக்கிழமை ஆண்டு விழாவை மெய்நிகர் விழாவாக வலையொளியில் நேரலையாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்ச் சங்கத்தின் கோடை விழா ஆகஸ்ட் 6, 2022 அன்று பிற்பகலில் நேரடி விழாவாக கீஹனர் பூங்காவில் கொண்டாடப்பட்டது. உறுப்பினர்கள் குடும்பத்தோடு வந்து கலந்து கொண்டு, பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று, பரிசு பெற்று விழாவைச் சிறப்பித்தார்கள்.

தமிழ்ப் பள்ளியின் 2022-23 கல்வியாண்டை மீண்டும் "மேசன் உயர்நிலைப்பள்ளி வளாகத்தில்" நேரடியாக நடத்த முடிவு செய்து 130 க்கும் மேற்பட்ட மாணவர்களோடு ஆகஸ்ட் 20, 2022 பிற்பகல் 2:00 மணிக்கு மாணவர், பெற்றோர், நிர்வாகிகள் இணைந்து தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடி வெற்றிகரமாக ஆரம்பமானது.

ஜூலை 1 முதல் அக்டோபர் 7 வரை நூறு நாட்கள் நடைப்பெற்ற "1 மில்லியன் அடிகள்" நடைப்பயிற்சி போட்டிகளில் உறுப்பினர்கள் கலந்து கொண்டு பலர் வெற்றிக் கோட்டைத் தொட்டனர். 450க்கும் மேற்பட்டோர் வருகை தந்த தீபாவளி - 2022 கொண்டாட்டம் நவம்பர் 19, 2022 அன்று உள்ளரங்கில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவின் கலை நிகழ்ச்சிகள் உறுப்பினர்களின் ஒப்பற்ற அர்ப்பணிப்புடன் தொழில்முறை கலைஞர்களின் நிகழ்ச்சிகளுக்கு இணையாக அல்லது அதற்கும் மேலாக மிகச் சிறப்பாக அமையப் பெற்றது. இந்த ஆண்டு புதிதாக பறை, ஒயிலாட்டம் போன்ற நிகழ்ச்சிகளை முறையாகப் பயிற்சி செய்து அரங்கேற்றினர்.

சித்திரை மற்றும் தமிழ்ப் பள்ளி ஆண்டு விழாச் சிறப்பு "சங்கமம்" இதழ்கள் உறுப்பினர் தமிழ்ப் பள்ளி மாணவர்களின் பங்களிப்பால் சிறப்புற வெளியிடப்பட்டது.

வலைதளம்: cincytamilsangam.org,
வலையொளி: youtube.com/@,
GreaterCincinnatiTamilSangam

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம்

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம் இந்த ஆண்டு, பெருந்தொற்று காலத்திற்குப் பிறகு, காலாந்திர விழாக்களை நேரடியாக முழு உற்சாகத்துடன் கொண்டாடியது. பொங்கல் விழா, சித்திரை விழா, முத்தமிழ் விழா மற்றும் குழந்தைகள் தின விழாக்களைப் பல முக்கிய பிரமுகர்களுடன் சிறப்பாகக் கொண்டாடியது. இங்கே ஆளுமையில் இருக்கும் அரசியல் பிரமுகர்கள் மற்றும் இந்தியாவிலிருந்து இங்கே வருகை தந்திருக்கும் கல்லூரிப் பேராசிரியர்கள், இசைக்கலைஞர்கள், திரைப்படப் பிரபலங்கள் மற்றும் ஏனையோரை இந்த வருடம் சங்கம் சந்தித்தது. பொங்கலுக்கும், தீபாவளிக்கும் பள்ளிகள் விடுமுறை அறிவித்திருந்ததால் மாணவர்களும் பல நிகழ்ச்சிகளில் ஆர்வமுடன் பங்கேற்றனர். முளைப்பாரி, பறை இசை, நடனம், நாடகம், இசை விருந்து தவிர இலக்கிய வினாடி வினா, சொற்பொழிவு, பட்டிமன்றம், பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் பல போட்டிகள், இன்பச் சுற்றுலா, விளையாட்டு நிகழ்ச்சிகள் என முழு வேகத்துடன் இந்த ஆண்டு மகிழ்வாகக் கொண்டாடியது. இச்சங்கத்தின் ஒரு அங்கமாகத் திகழும் தென்றல் முல்லை காலாந்திர இதழ்களை ஒவ்வொரு விழாவிலும் வெளியிட்டனர்.

இந்த வட்டாரத்திலுள்ள தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டன. இவ்விழாக்களின் போது பாரம்பரிய உணவு வழங்கப்பட்டது. இந்நாட்டில் உள்ள இசைக் கலைஞர்கள் இசைக் குழுக்களைப் பல மாநிலங்களில் நடத்தி வருகின்றனர். பாடும் திறன் மட்டுமல்லாது ஏனைய இசைக்கருவிகளை மேம்பட வாசிக்கும் இவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களின் இசை நிகழ்ச்சிகள் ஒவ்வொரு விழாவின் போதும் நடத்தப்பட்டன.

முனைவர் அவ்வை நடராசன்

1992 முதல் 1995 வரை தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர், செம்மொழி தமிழ் உயராய்வு நிறுவனத்தின் துணைத் தலைவர், தம் பட்டிமன்றப் பேச்சால் ஔவைக்குள் இருந்த கன்னித் தமிழை உலகறியச் செய்தவர்.

அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கம்

2022ஆம் ஆண்டின் நிறைவில் இருக்கின்றோம், தமிழர்த் திருநாளில் தொடங்கி, தீபாவளிக் கொண்டாட்டம் வரை அட்லாண்டாத் தமிழ்ச் சங்கம் அட்லாண்டா மக்களுடனும், தமிழுடனும் இணைந்து நடைபோட்டுள்ளது.

அட்லாண்டா மாநகரத் தமிழ்ச்சங்கம் 2022, மார்ச் 5 ஆம் நாள் பொங்கல் விழாவைத் தமிழர் திருவிழாவாகக் கொண்டாடியது.

இந்தத் திருவிழா வழக்கம் போல அல்லாது, நமது தாய்த் தமிழகத்தில் நடைபெறும் திருவிழாப் போல ஒரு திறந்த வெளிப் பூங்காவில் கொண்டாடப்பட்டது. திருவிழாக்களில் இருப்பது போலவே பெட்டிக்கடைகள், மோர்ப்பந்தல், தண்ணீர்ப் பந்தல், சர்பத், பொங்கல் வைக்கும் போட்டி, மருதாணி இடல், முக ஓவியம் தீட்டல், பெண்களுக்கு விருப்பமான ஒப்பனைப் பொருட்களுக்கான கடைகள் மற்றும் இதரக் கடைகளும் இடம் பெற்றிருந்தன. இது வந்திருந்த தமிழ் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும், வியப்பையும் தந்தது என்றே சொல்லலாம்.

அதனைத் தொடர்ந்து ஏப்ரல் 16 ஆம் நாள், சனிக்கிழமை அன்று அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கத்தின் சித்திரைத் திருவிழாவும் வெகு சிறப்பாக நடைபெற்றது, இதில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர், இதற்கிடையே பள்ளிக் குழந்தைகளுக்கான அனைத்து பாடங்களுக்குமான சிறப்பு வகுப்புக்களைக் குழந்தைகளே எடுத்தனர், அதற்காக அவர்களுக்கானத் தன்னார்வலர் பணி நேரமும் கொடுக்கப்பட்டது.

ஆகஸ்ட் 27ஆம் நாள், சனிக்கிழமை அன்று அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கத்தின் பெண்மையைப் போற்றும் 'பாவை' மகளிர் விழா கோலாகலமாக நடந்தேறியது. பெண்களின் தனித்திறமைகளை வெளிக்கொணரும் விதமாக, "தனித்திறன் தாரகைகள்" நிகழ்ச்சி, ஆடல், பாடல், நகைச்சுவை என களை காட்டியது!

இதனைத் தொடர்ந்து, GATS மற்றும் GCSMR [Global Centre For Siddha Medicine And Research] உடன் இணைந்து சித்த மருத்துவர்களான Dr.செல்வ சண்முகம் மற்றும் Dr.அருள் அமுதன் ஆகியோருடன் "சித்த மருத்துவ முறையின் மருந்து அல்லாத அணுகுமுறைகள் மூலம் நோய்களைத் தடுப்பது" என்ற தலைப்பில் ஒரு சந்திப்பு அமர்வை கடந்த சூலை மாதம் நடத்தியது. இந்த சந்திப்பு ஷரோன்ஸ் ஸ்பிரிங்ஸ் பார்க்கில் நேரடியாக நடைபெற்றது.

இதில் பலரும் கலந்து கொண்டு பயனடைந்து, மருத்துவர்களிடமும் தங்களின் பல கேள்விகளுக்கு விடை பெற்றுச் சென்றனர்.

அது மட்டுமல்லாமல் வாரம்தோறும் பொது

மருத்துவ முகாம் மற்றும் பல் மருத்துவ முகாமை அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கம் தொடர்ந்து நடத்தி வருகிறது. இதனால் பலர், குறிப்பாக போதிய மருத்துவ காப்பீடு இல்லாதவர்கள் பயன் பெறுகின்றனர்.

மேலும் நமது தொண்டுக்குழு வாயிலாக தன்னார்வலர்கள் ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை கிவின்னட்டில் உள்ள *'home of hope'* என்ற குழந்தைகள் காப்பகத்திற்கு உணவை வழங்கி வருகின்றனர். அதோடு இந்த ஆண்டு ரத்த தான முகாமும் மே மாதம் நடத்தப் பட்டது. சதுரங்கப் போட்டியில் இருந்து வந்த பணமும் St.Jude's என்ற குழந்தைகள் ஆய்வகத்தின் தொண்டுக்கு குழு சார்பாக அளிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

2022 ஆம் ஆண்டிற்கான வலைப்பந்து போட்டிகள் வெற்றிகரமாக ஆகஸ்ட் மாதம் 14ஆம் நாள் நிறைவடைந்தது, மேலும் சிறுவர்களுக்கான சதுரங்கப்போட்டி, வலைப்பந்து போட்டிகள் பெரியவர்களுக்கான கைப்பந்து போட்டிகள் என விளையாட்டுத் துறையிலும் தனது ஒத்துழைப்பை மக்களுக்கு வழங்கி தமிழ்ச் சங்கம் ஊக்குவித்தது. மேலும் இந்த ஆண்டு 3 முறை வயதானவர்களுக்கான நிகழ்வை நடத்தி தாயகத்திலிருந்து வரும் பெற்றோர்களுக்கு ஒரு அரவணைப்பையும், அவர்களுக்கான மகிழ்ச்சிக்கான நேரத்தையும் அட்லாண்டாத் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்திக் கொடுத்தது என்றால் அது மிகையல்ல!

அக்டோபர் திங்கள் 8 ஆம் நாள் நடந்த, 2022 ஆம் ஆண்டின் முத்தமிழ் விழா சங்க உறுப்பினர்கள் அனைவரின் ஒத்துழைப்பால் மிகச்சிறப்பாக நடைபெற்றது, இந்த முத்தமிழ் விழாவில் தமிழ்ப் போட்டிகளும் நடத்தப்பட்டது. தமிழ்ப் போட்டிகள் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் நேரில் நடத்தப்பட்டது. இதில் 159 போட்டியாளர்கள் 309 போட்டிகளுக்கு விண்ணப்பித்திருந்தார்கள். குழந்தைகளுக்கான தமிழ்க் கல்வியை மேம்படுத்த தமிழ்ச் சங்கத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்ட இந்தத் தளத்தை அவர்கள் மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டது எங்களுக்கு மிகுந்த மன நிறைவைக் கொடுத்தது.

அக்டோபர் மாதம் 29-ஆம் தேதி சனிக்கிழமை தமிழ்ச் சங்கத்தின், 'தமிழே அமுதே", 'இசை மழை' மற்றும் 'மூத்தோர்களுக்கானக் குழு' ஆகிய மூன்று துணைக் குழுக்களும் இணைந்து நடத்தும் "நெஞ்சம் மறப்பதில்லை - புதினம், புதிர், புத்திசை" என்ற பொன்னியின் செல்வன் சிறப்பு நிகழ்ச்சி என மூன்று நிகழ்வுகளும் ஒரே நேரத்தில் நடைபெற்றன.

நவம்பர் 19 ஆம் நாள் நடைபெற்ற தீபாவளிக் கொண்டாட்டம் இந்த ஆண்டின் நிறைவு நிகழ்வாக அமைந்தது, மிகவும் சிறப் பாக நடைபெற்ற இந்த நிகழ்வில் அட்லாண்டாவில் வாழும் பெரும்பான்மையான தமிழர்கள் ஒரே இடத்தில் கூடி மகிழ்ந்தனர்.

இந்த ஆண்டு முழுவதும் இலக்கிய குழுவின் வாயிலாக இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை தமிழே அமுதே என்னும் நூல் பகிரும் நிகழ்வு நடைப்பெற்றது. அதில் திருக்குறளும் மூதுரையும் சிறு குழந்தைகள் பகிர்வார்கள். அவர்களைத் தொடர்ந்து பெரியவர்கள் நூலை அறிமுகம் செய்வர். அதே போல், 'கூத்துப் பட்டறை' என்ற குழு தொடங்கப்பட்டு அதன் வாயிலாக இரண்டு சிறுவர் நாடகங்கள் நடத்தப்பட்டது.

இவ்வாறு இந்த ஆண்டு முழுவதும் பல்வேறு வகையில் நல்ல நிகழ்வுகளாலும், நல்ல முன்னெடுப்புகளாலும் தமிழோடும் தமிழ் மக்களோடும் இணைந்து இருந்தது அட்லாண்டா மாநகரத் தமிழ்ச் சங்கம் என்பதில் உவகை கொள்கிறோம்.

மேலச்சேரி மற்றும் கீழச்சேரி அகழ்வாராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்டச் சின்னம் எது?

அ. சல்லிக்கட்டு, ஆ. நிற்கும் யானை, இ. சண்டை புலி, ஈ. சேவல் சண்டை

சரியான விடை : ஈ

சாஸ்தா தமிழ் அறக்கட்டளை

சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் 15வது ஆண்டு திருக்குறள் மற்றும் தமிழ் திறன் போட்டிகள் வெகு சிறப்பாக நடந்தேறியது. திருக்குறள், ஆத்திச்சூடி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் ஓவியப் போட்டிகள், நாடு தழுவிய அளவில் நடத்தப்பட்டு, 400க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர். 15700 முறை திருக்குறள் ஓதப்பட்டு $7900 பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது. செயின்ட் லூயிஸ், மிசௌரியிலிருந்து 12 வயது மாணவன் செல்வன். தனிஷ் சட்டநாதன் 1330 திருக்குறளையும் ஓதி "குறள் இளவரசன்" என்ற பட்டத்தை வென்றார்.

12வது ஆண்டாக, நிதி திரட்டும் விழா கடந்த வாரம் நடத்தப்பட்டது. உதவும் கரங்கள், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், வட டெக்சாஸ் உணவு வங்கி(NTFB) ஆகிய நிறுவனங்களுக்கு $130Kக்கும் மேலாக நிதி திரட்டப்பட்டு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் 3T கிரியேஷன்ஸ் வழங்கிய "எமலோகத்தில் 5G " என்ற நகைச்சுவை மேடை நாடகம் நிகழ்ச்சிக்குக் கூடுதல் மெருகேற்றியது.

"பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து"

சிலப்பதிகாரம் (5:68–69)

ஒரு விழாவாகப் 'பொங்கல்' எனும் வார்த்தையின் முதன்மையான குறிப்பு நம் தமிழின் முதல் காவியமான சிலப்பதிகாரத்தில் 'இந்திரவிழா ஊர் எடுத்த காதை' யில் இடம்பெற்றுள்ளது.

எழுத்து, சொல், பொருள் என்ற பகுதிகளாகப் பிரித்து அமைக்கப்பட்ட நூல் எது?

அ. புறநானூறு ஆ. நற்றிணை இ . தொல்காப்பியம் ஈ . அகநானூறு

விடை : இ . தொல்காப்பியம்

கென்டக்கி தமிழ்ச் சங்கம்

கென்டக்கி தமிழ்ச் சங்கம் 2022 ஆண்டு நடத்திய நிகழ்ச்சிகளின் பட்டியல் பின் வருமாறு:

மார்ச் 13 - மகளிர் தின கொண்டாட்டம்

ஏப்ரல் 24 - தமிழ்ப் புத்தாண்டு கொண்டாட்டம் (விழாவில் லூயிஸ்வில் மேயர் திரு கிரெக் பிஸிச்சேர் பங்குபெற்று திருவள்ளுவர் சிலையினைத் திறந்து வைத்தார்).

ஜூலை 30 - கிரிக்கெட் விளையாட்டு போட்டி (23 அணிகள் பங்குபெற்றன, முதல் பரிசு $1500 இரண்டாம் பரிசு $500)

ஆகஸ்ட் 7 - கோடை மகிழ்விழா

நவம்பர் 5 - வாழை இலை விருந்து

பிராகுயி மொழி பேசும் பழங்குடியினர் இன்றைய மத்திய பலூசிஸ்தான், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் பகுதிகளில் வாழ்கிறார்கள். பிராகுயி மொழி ---------------- மொழியினத்தைச் சேர்ந்தது.

விடை: திராவிட

36 வது பேரவை விழா

தங்கத் தலைநகரில் 36வது பேரவை விழா நம் தமிழ்த் திருவிழா!

“வெட்டுக் கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பலபொருளும் குடைந் தெடுப்போம்”
என்ற பாரதியின் வரிகளுக்கிணங்க,

தங்கம் கண்ட மாநிலத் தலைநகரம் சாக்ரமெண்டோவில், சங்கம் கண்ட தமிழை கொலுவேற்றி அழகு காண உலகத் தமிழரை வருக வருகவென வரவேற்கின்றனர் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை நண்பர்களும், வெள்ளி விழா கண்ட சாக்ரமெண்டோ தமிழ் மன்ற அன்பர்களும்.

“ஊரில் தமிழின் மார்பைத் தட்டிப்
பாரில் தமிழன் நானே என்னும்
சீரைத் தந்த தமிழே வாழ்க!”

என்ற பாரதிதாசனைப்போல, நாமும் தமிழைக் கொண்டாட,

இந்த மாபெரும் 36வது பேரவைத் தமிழ் விழா, ஜூன் 30 முதல் ஜூலை 3 வரை போட்டிகளுடனும், பாட்டுகளுடனும், தமிழுக்கே உரித்தான கவிதை மற்றும் பேச்சுக்களுடனும் தமிழை மேலும் மேம்படுத்தி, மெருகேற்றி, மேளதாளங்களுடன் விழாக்கோலம் பூண்டு தமிழர் அனைவரும் ஒன்று திரளும் ஒரு அரிய பெரிய வட அமெரிக்கத் தமிழ்த் திருவிழா.

விழா நடைபெறும் தேதிகள் அமெரிக்க விடுதலை தின விடுமுறை நாளுடன் இணைந்து அமைவதால், பங்கேற்பாளர்களுக்கு உதவும் வண்ணம், விழா அமைப்பாளர்கள் ஒரு சிறப்பு சுற்றுலாக் குழுவை அமைத்துள்ளனர். இந்தக் குழுவின் தன்னார்வலர், தமிழ் விழாவில் பங்கேற்க வருகை தரும் அன்பர்களுக்கு, சாக்ரமெண்டோ மற்றும் சுற்றுப் பகுதிகளான சான் ஃப்ரான்சிஸ்கோ, நேப்பா பள்ளத்தாக்கு, லேக் டாஹோ, யோசிமட்டி தேசிய பூங்கா புகழ்வாய்ந்த சுற்றுலா இடங்களை சுற்றுவதற்கு அவரவர் சுற்றத்தார் போல உதவக் காத்திருக்கின்றனர்.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின்

என்ற வள்ளுவத்தின்படி, இந்தத் தமிழ் மாநாடு கலை இலக்கியம் மட்டுமல்லாது, வாணிகம் வளர்க்க, தொழில் சார்ந்த பட்டறிவை இணைக்கும் எண்ணத்துடன் தொழில்முனைவோர் மாநாடு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. தொழில் சார்ந்தோர் மற்றும் தொழில் ஆர்வலர் பங்குபெற்று பயன் பெற இந்த மாநாடு வழி வகுக்குமென்பது ஒருங்கிணைப்பாளர்களின் எண்ணம், நோக்கம்.

திசை, இன பாகுபடில்லாமல் வளர்ந்த தமிழ் மொழி மேலும் வளர, வாழ, தழைத்தோங்க உலகத் தமிழரை அன்புடன் அரவணைத்து,

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும், சாக்ரமெண்டோ தமிழ் மன்றமும் “வாரீர்...வாரீர்” என வரவேற்கிறது!

பேரவையின் 36வது தமிழ் விழாவின் ஒரு அங்கமாக, சென்னையில் சனவரி 8 மற்றும் 9, 2023 ஆகிய நாட்களில் தொழில் முனைவோருக்கான முதல் மாநாடு(FiTEN - FeTNA international Tamil Entrepreneur Network) நடைபெற இருக்கிறது. இஃது உலகளாவிய தமிழ் தொழில் முனைவோர்களை ஒன்றிணைத்து, வளர்ந்து வரும் தொழில் முனைவோருடனும், தொழில் முனைவோராக விருப்பமுள்ள மாணவர்களுக்குடனும் ஒரு உறவுப் பாலம் அமைக்கும் முயற்சியாகும். அனைவரும் அலைகடலென திரண்டு வாரீர்! நல்லாதரவு தாரீர்!!

மேலும் விவரங்களுக்கு, www.fiten.org என்ற இணையதளப் பக்கத்தை பார்க்கவும்.